# ஸ்ரீ சதாசிவப் பிரம்மேந்திரர் சரிதம்

82-2



(கோவில் கோபுரம்)

ந்திர சபையோரால் எழுதி வெளியிடப்பட்டது

1950 [12 அணா

ADALAYAM
630 307
KARAIKUDI
PHONE 436846

A.NO: 1137
Q1: 332 ப

# சதாசிவப் பிரம்மேந்திரர் சரிதம்

1137

கோவிலூர் ஆதீனம்
A.NO: 1137
கோவிலூர்-630 307

நெரூர் சதாசிவப் பிரம்மேந்திர சபை வெளியீடு

[இரண்டாம் பதிப்பு]

1950

விலை 0-12-0

நேஷனல் ஆர்ட் பிரஸ்
சென்னை-18

# இரண்டாம் பதிப்பின் முகவுரை

இறைவன் அருளால் முதற்பதிப்பின் பிரதிகள் யாவும், சதாசிவரின் அருளைப் பரப்ப எம் கைகளை விட்டகன் ன. நூலின் நயத்திலும் பெரியாரின் அருளே அதற்குக் ரணமெனக் கொள்கின்றோம். முதற்பதிப்பைப் பல ழ்ப் பத்திரிகைகளும் நல்ல மதிப்புரைகளுடன் வரவேற் ன. தமிழ்ப்பக்தகோடிகள் முதற்பதிப்புப் பிரதிகளைப் ன்படுத்திக் கொண்டதுமன்றி மேலும் 'ஸ்ரீ சதாசிவப் ரம்மேந்திரரின்' சரிதத்தைக் கேட்கின்றார்கள். அக்கார த்தாலேயே இந்த இரண்டாம் பதிப்பு வெளிவருகின்றது.

முதற் பதிப்பில் உள்ள எழுத்துப்பிழை முதலிய றைபாடுகள் இதில் நீக்கப்பட்டுள்ளன. புத்தகத்தின் ருவம், காகிதம் இவைகளை மாற்றி, புத்தகத்தை ழகாக அமைக்க முயன்றுள்ளோம். அதனால் புத்த த்தின் விலையை உயர்த்த வேண்டி நேர்ந்தது. இப் திப்பையும் முழு ஆதரவுடன் வரவேற்றுப் பயன்படுத்திக் ள்ளும்படி பக்தகோடிகளை வேண்டுகின்றோம்.

இம்மகானின் பெருமை நாடுமுழுதும் பரவியுள்ள கையாலும், அவரவர் தம் தம் மொழியில் இச்சரி தை வேண்டுவதாலும், தெலுங்கு, கன்னடம், ஹிந்தி, ங்கிலம் முதலிய மொழிகளிலும் இந்நூலை வெளியிட ணுகின்றோம்.

நெரூர்
—3—'50

**ஸ்ரீ சதாசிவப் பிரம்மேந்திர சபையார்**


# ஸ்ரீ பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்ய விசுத்தாநந்த தீர்த்த ஸ்வாமிகளின் அபிப்பிராயம்

யாத்ரா ஸ்தலம் : நெரூர். ஸ்ரீ குருசரணலயம்

இவ்வருஷம் ஸ்ரீ ஸதாசிவப் பிரமேந்திரரின் ஆராதனை மஹோத்ஸவத்திற்கு வந்து ஸ்ரீ அதிஷ்டானத்தைத் தர்சனம் செய்யக் கிடைக்கப் பெற்றதை, பிறவி எடுத்ததன் பலனை அன்றுதான் பெற்றதாக எண்ணுகிறேன். ஸ்ரீ பிரம்மேந்திரரின் சரித்திரத்தைப்பற்றி எல்லோரும் அறிய விரும்புவது நியாயமான காரியம். அக்குறையை இவ்வருஷம் ஸ்ரீ பிரம்மேந்திர சபையார் ஒரு சரித்திரம் மூலம் நீக்கியிருக்கிறார்கள். சங்கரரே கலியில் ஸ்ரீ சங்கர பகவத் பாதர்களாக அவதரித்ததுபோல், பிரம்மா, விஷ்ணு, ருத்ரன், மஹேசுவரன், ஸதாசிவன் என்ற ஸதாசிவ மூர்த்தியே கலியில் சற்றேறக்குறைய இருநூறு வருஷங்களுக்கு முன் அவதரித்ததாகவேதான் சொல்ல வேண்டும். ஸ்ரீ சங்கரரின் ஜன்மஸ்தானம் காலடி என்றே நிச்சயமாய்த் தெரிகிறது. பிரம்ஹஸ்ரீபூதரான ஸ்தலத்தைப்பற்றி பல சரித்திரக்காரர்கள் பலவாறாய் எழுதியிருக்கிறார்கள். ஸ்ரீ சதாசிவப் பிரம்மேந்திரர்களுக்கு அதிஷ்டானம் நெரூர் என்பதில் சந்தேகமேயில்லை. ஜன்ம ஸ்தானம் சம்பந்தப் பட்டமட்டில் பலவூர்களேயும், குலம், கோத்திரம் இவைகளைப்பற்றி ஒவ்வொரு பிரிவோரும் தம்தம் குலம் கோத்திரங்களில் பிறந்ததாகவும் சொல்லுகிறார்கள். ஸ்ரீ பிரம்மேந்திரர்களும் ஒவ்வொரு குலத்தோருக்கும் அவரவர்கள் குலத்தவராகத் தோற்றும் ஸித்தசக்தி வாய்ந்தவர் என்பதில் கொஞ்சமும் ஐயமில்லை. ராஸக்ரீடையில்

ஸ்ரீ கிருஷ்ணபகவான் 16,000 கோபிதேவிகளுக்கு ஒரே சமயத்தில் ஒவ்வொரு கோபிக்கும் அவரவர்களிடமே இருந்ததாகத் தோற்றுவித்ததுபோல் தோற்றுவிப்பது ஸ்ரீ சதாசிவப் பிரம்மேந்திரர்களுக்கு ஒரு விஷயமில்லை. ஸ்ரீ சதாசிவப் பிரம்மேந்திரர்களின் ஸித்தலீலா விநோதங்களைப்பற்றிப் பரம்பரையாய் வந்துகொண்டிருக்கும் சமாசாரங்களெல்லாம் சத்தியமே. ஸ்ரீ சதாசிவன் மதுரையில் ஸோமஸுந்தர பாண்டியனாக அரசுபுரிந்த காலத்திலும், ஓர் மகா ஸங்கராந்தியன்று எல்லாம் வல்ல ஸித்தராக வேஷம் பூண்டு பாலர்களை விருத்தர்களாகவும், விருத்தர்களைப் பாலர்களாகவும் ஆக்கி இன்னும் பல அற்புதச் சித்து விளையாட்டுகள் விளையாடி, கல்யானையை உயிருள்ள யானையாகக் கரும்பு தின்னும்படி செய்த லீலைகளைப் போல், அந்த ஸதாசிவ மூர்த்தியே சதாசிவப் பிரம்மேந்திரர்களாகத் தத்காலத்தில் பிரஸ்தாபத்தில் உலாவி வரும் சித்து விளையாட்டுகளைச் செய்திருப்பார் என்பதில் கொஞ்சமும் சந்தேகமில்லை. பிரஸ்தாபிக்கப்படும் விருத்தாந்தங்களெல்லாம் ஸ்ரீ ஹாலாஸ்ய மாஹாத்மியத்தில் உள்ள ஸித்த சரித்திரம் எவ்விதம் ஸத்தியமோ அவ்விதமே ஸத்தியம். இதற்கு அத்தாட்சியாக ஸ்ரீ சிருங்ககிரி ஸ்ரீ சங்கராச்சாரியராகவிருந்த ஸ்ரீ சச்சிதானந்த சிவாபிநவ லக்ஷ்மீநரஸிம்ம பாரதிஸ்வாமிகளவர்கள் விருத்தத்தில் ஸ்தோத்திரம் செய்திருக்கிறார்கள். பிரதி வருஷத்திலும் வைசாக சுத்த தசமியில் பிரம்மேந்திரர்களுக்கு ஆராதனையும், துவாதசியன்று ஸ்ரீ சங்கர பகவத் பாதர்களுக்கு ஆராதனையும் நடந்து வருகின்றன. அதனால் உபய மூர்த்திகளும் ஒன்றேதான் என்பதும் பொருத்தமான விஷயம்.

| | |
|---|---|
| விருஷ சம்வத்ஸர<br>சைத்திர மாஸம் சுக்ல த்வாதசி<br>குருவாரம் | ஸ்ரீ நாராயண ஸ்மிருதி |



ஸ்ரீ சதாசிவ பிரம்மேந்திராள்

# சதாசிவப் பிரம்மேந்திரர் சரிதம்

## முதல் அத்தியாயம்

### முன்னுரை

ஆடியும் பாடியும் அலைந்தும் திரிந்தும் வளர்ந்தும் மூத்தும் செல்கின்ற மனிதன் கலவரத்தினிடையே அமைதியையும், வேற்றுமையினிடையே ஒருமையையும், துன்பத்தினிடையே இன்பத்தையும் காண முயன்று வருகின்றான். அவன் முயற்சி வெற்றிபெற முதலில் அவன் உண்மை யாதென்பதை அறிய வேண்டும். உண்மையைத் தெளிந்தவுடன் இருப்பவைகளையும் நிகழ்பவைகளையும், அவை தம்மைப் பிணைப்பதையும் சரியாக அளவிட்டறிந்து, இன்ப துன்பங்களின் இடர்ப்பாட்டினின்றும் விடுதலை அடைந்து, மனிதன் அமைதி பெறுகின்றான். ஆயின் உண்மை யாது என்பதைத் தெளிவதும், அடைந்த அறிவைப் பயன்படுத்தி வாழ்க்கையைச் செம்மைப் படுத்துவதும் எளிய காரியமன்று; மிக மிக அரிய தொன்று. வானம் நிறமற்றதென்பது உண்மையாயினும் அது நீல நிறத்ததாகக் காணப்படுவதனால், அதற்கும் நீல நிறத்திற்கும் தொடர்பை ஏற்படுத்தி, அதை நீல வானாகவே கொள்வதைப் போன்று, உண்மை தனித்துத் தன்னியல்புடன் விளங்குவதாயினும் அதை உண்மையல்லாதவைகளுடன் பிணைத்துத் தப்பாக அறிந்து மனிதன் துன்பமுறுகின்றான். ஆகையால் பலகோடி மக்கள் தோன்றி

KOVILOOR MADALAYAM KOVILOOR-630 307 (NEAR) KARAIKUDI PHONE

யழிந்தும், அவர்களில் எப்பொழுதோ ஒரிருவர் மட்டும் உண்மையை அறிந்து அதன்வழி நிற்கின்றனர். அவ்விதம் நிற்பவர், மலையுச்சியிலேற்றிய விளக்கைப் போன்று ஒளி பரப்பி, இருளை மாய்த்து, பிறரும் உண்மையை அறிய உதவுகின்றனர்.

இவ்விதம் உண்மையை அறிவோர் சிலரேயாயினும் அவர்களும் ஒருவகையி லமைபவரன்று. இல்வாழ்க்கையில் மகிழ்ந்து மற்றவர்களுடன் வேறுபாடில்லாமலிருப்பவர் கள் சிலர். துறவு பூண்டு காடும் நாடும் சுற்றித் திரிந்து, சமுதாய விதிகளைப் புறக்கணித்து நிற்பவர் சிலர். பேய ராகவும், பித்தராகவும் தம்மைப் பிறர் ஏசவும் மறைந்தும் தோன்றியும் செல்பவர் சிலர். இவர்களில் சிலர் தம் அநு பவத்தைப் பிறர்க்கு விளக்க நூலெழுதியும், உபதேசித் தும் செல்பவரிருக்க, வாய் மூடி மௌனியாய்ச் செயலற்று இருப்பவர்களும் உளர். இவ்விதமாக அலைந்து திரியும் ஆன்ம ஞானிகளைப் பிரித்தறிவது சுலபமான காரியமன்று. பிறர் தம்மை அறியினும் அறியாவிடினும், புகழினும் இகழினும் அவர்கள் நிறைவுடனும், அமைதியுடனும் வாழ்க்கையைச் செலுத்துகின்றூர்கள். கோடிப்பொன் பெற்ற பொருள் மிக்கவனும், அரசதிகாரம் பெற்றவனும், பெற்றிராத ஓர் வலிவைப் பெற்று அவர்கள் விளங்கு கின்றனர். அவ்வலிவு அவர்கள் பெற்றிருப்பதைப் பிறர் அறியாமல் இருப்பதற்கில்லை. அவ்வலிவை உட னேயோ, சற்றுத் தாமதித்தோ கண்டறிந்து அதைப் போற்றுகின்றனர். இவர்களுக்கும் மற்றவர்களுக்கும் பொருத்த மொன்றும் இல்லையேனும், எதிர் மாற்றமே மிகுந்து இருந்தாலும், மற்றவர்கள் அத் தனிவலியால் ஓரளவிற்கு மடக்கப்படுகின்றனர். தாங்களும் அவ்

வாழ்க்கையை ஏற்காவிடினும் அதைப் பெருமையுடனேயே குறிக்கின்றனர்.

தென்னாட்டில் ஆத்ம ஞானம் பெறும் பெரு முயற்சியில் ஈடுபட்டவர்கள் பண்டை முதலே பலர் தோன்றியுள்ளார்கள். ஆதிசங்கரர், இராமானுஜர், மத்வாசாரியார், ஆழ்வார்கள், நாயன்மார்கள் முதலியோர் பக்தியிலும், ஞானத்திலும், யோகத்திலும் சிறப்பெய்தி ஆன்ம அறிவைப் பெற்று உயர்ந்தவர்கள். கிருஸ்தவ சகாப்தம் பதினெட்டாம் நூற்றாண்டில் தமிழ்நாட்டில் பல பெரியார்கள் அவதரித்தார்கள். அவர்களில் தலை சிறந்தவர் சதாசிவேந்திரர் என்னும் ஆன்ம ஞானி. நிர்வாணத்துடன், பிறர் தம் கையை வாளால் வீசவும் உணர்வற்று, ஆன்மாவில் அடங்கிய பெரியவர். இறைவன் எங்கும் பரந்தும் கரந்துமுள்ளவன் என்பதை விளக்க வந்தவர், திருவிசை நல்லூரில் வாழ்ந்த 'அய்யாவாள்' எனும் ஸ்ரீதர வேங்கடேசர். பக்தியினால் அதுவும் நாம சங்கீர்த்தன பஜனையினால் பாமரரும் பரமனையடைய வழிகாட்டிய துறவி போதீந்திர ஸ்வாமிகள். அக்காலத்து வாழ்ந்தவரே சிவயோகியாகிய தாயுமான ஸ்வாமிகள். திருவையாற்றில் தோன்றி வளர்ந்து, இராமனுடைய சேவையினும் வாழ்க்கைப் பயன் வேறில்லையென்றும், அவன் திவ்ய நாம சங்கீர்த்தத்தினும் சுவையுள்ளது பிறிதில்லையென்றும் உலகிற்கு விளக்கிய துறவியாகிய தியாகப் பிரம்மமும் கிட்டத்தட்ட இக்காலத்தவரே. இவ்வாறாக, அந்நூற்றாண்டில் பல கதிர் பரப்பும் கதிரவனைப் போன்ற பல பெரியார்கள் திகழ்ந்தார்கள்.

அரசர்களின் பிரதாபங்கள் குறிக்கப்படுவதைப் போன்று, உன்மத்தரைப் போலவும், பேயரைப் போலவும் சமூகத்துடன் பழகியும் பழகாமலுமிருந்த பெரியார்களின்

வாழ்க்கையைப் பற்றிய குறிப்புகள் கிடைப்பதில்லை. ஆயின் அவர்களில் சிலர் எழுதியுதவிய நூல்களிலும் அவ்வக்காலப் புத்தகங்களிலும், அரசாங்க தஸ்தவேஜுகளிலும் அப் பெரியவர்களைப் பற்றிய சில குறிப்புகள் கிடைக்கின்றன. அப் பெரியவர்களைப் பற்றிய கர்ண பரம்பரைச் செய்திகள் பலவாகப் பல இடங்களிலும் பெருகியும் வழங்குகின்றன.

இவ்விதமாகக் கிடைக்கும் குறிப்புகளைக்கொண்டு ஒரு சரித்திரம் எழுதுவது அரிய காரியமாகின்றது. வேண்டிய திறனும், சாதனங்களுமின்றியே இச்சரிதம் எழுதப் படினும், சதாசிவேந்திரர் ஜீவியக் கதையை ஒருவாறுக எழுதி முடிக்க வேண்டுமென்னும் ஆசையினுலேயே இக் காரியம் மேற்கொள்ளப் படுகின்றது. ஆகையால் இச் சிறு நூலில் பிழைகளும் குறைகளும் இருப்பது இயல்பு. ஆயினும் உலக வாழ்க்கையிலேயே அழுந்திப் போகின்ற பொது மக்கள் இதைக் கண்ணுற்று, அப்பெரியோரின் வாழ்க்கைத் தத்துவ ஆராய்ச்சியில் ஈடுபட்டு, அதன் பயனுய் ஒழுக வேண்டிய உயர் நெறியைக் கைக்கொள்ள உதவுமளவிற்கு இது பயன்படுமே என்பது ஆசை; இதிலுள்ள குறைகள் பிழைகள் இவைகளை நீக்கமுற்பட்டு வெளிவரும் பின் நூல்களில், அப்பெரியாரின் உண்மைச் சரிதம் வெளியாகுமென்ற நம்பிக்கை; இவையிரண்டுமே இந்நூல் வெளிவருதற்குத் தூண்டுகோல்கள்.

இன்றளவிலும், சதாசிவேந்திர பிரமத்தின் ஜீவிய சரிதத்தைப் பற்றிய பல கட்டுரைகள் தமிழ், ஆங்கில சஞ்சிகைகளில் வெளிவந்துள்ளன. இப்பெரியார் எழுதிய நூல்களில் வெளிவந்த சிலவற்றின் முகவுரைகளிலும் இவரைப்பற்றிய குறிப்புகள் உள்ளன. புதுக்கோட்டை

கனகராஜையர் எழுதிய முனிவர் சரிதம் என்னும் பாநூலும் சிறப்பாக அமைந்துள்ளது. புதுக்கோட்டை ராஜ்ய சரிதக் கோவை, கும்பகோண மடாதிபதிகளின் பாரம்பரிய சரிதை முதலிய பற்பல நூல்களிலும் சதாசிவப் பிரம்மத்தைப் பற்றிய குறிப்புகள் கிடக்கின்றன. சதாசிவர் சமாதியுள்ள நெரூர், 'அய்யாவாள்' வதிந்த திருவிசைநல்லூர், திருமாநிலையூர், கரூர், மதுரை முதலிய இடங்களில் வழங்கும் கர்ண பரம்பரைச் செய்திகளும் பலவாறாகப் பெருகி யிருக்கின்றன. இவைகளையெல்லாம் திரட்டி யெடுத்து ஆராய்ந்தறிந்து இது எழுதப்படுகின்றது. சதாசிவருடைய சரிதத்தைப் பற்றிப் பிறர் செய்த வேலையை முழுதும் பயன்படுத்தியே இதை எழுதுகின்றோம்.

வருஷந்தோறும் சதாசிவேந்திர பிரம்மத்தின் ஆராதனைக்கு வரும் பல பக்தர்களும், அவர் சமாதி தரிசனத்திற்காக வருஷம் முழுதும் வரும் யாத்திரிகர்களும் பெரியவரின் சரிதத்தை ஆவலுடன் கேட்டு வருகின்றார்கள். அவர்களுக்குத் தனித் தனியான சம்பந்தமற்ற சில கதைகள் சொல்லப்படினும் முழுவதுமுள்ள சரிதம் இதுவரையில் கிடைக்கும்படி செய்யப்படவில்லை. பக்தர்கள் இந்த மகானின் ஜீவிய சரிதத்தை எளிதில் உணர்ந்து பயன்படும் நோக்கத்துடனேயே ஸ்ரீ சதாசிவப் பிரம்மேந்திர சபையோரின் முயற்சியால் இது எழுதப்படுகின்றது.

# அத்தியாயம் இரண்டு
## பிறப்பும் இளமையும்

உலகெலாம் உணர்ந்து ஓதற்கரியவனாகிய சோம சுந்தரக் கடவுள் கோயில் கொண்டருளிய மதுரையம் பதியின் விசேஷங்கள் பல. பாண்டிய நாயக்க அரசர் களும், நான்மறை அந்தணரும், பிறரும் சோமசுந்தரப்பெரு மானை வழிபட்டு இம்மையிலும் மறுமையிலும் மேன்மை அடைந்திருக்கின்றார்கள். தமிழ்ச் சங்கம் தழைத்தோங்கி வளர்ந்து, அரும்பெரும் புலவர்கள் தலைசிறந்த நூல்களை எழுதி உதவியுள்ளார்கள். அத்திவ்ய க்ஷேத்திரத்தில் ஒரு வைதிக ஆந்திரப் பிராமணர் குலத்தில் தோன்றி, அப் பதியின் சிறப்பை அதிகப்படுத்தி யுள்ளார் சதாசிவப் பிரம்மேந்திரர்.

ஆந்திர வைதிகப் பிராமணர் சோமநாத அவதானி யாருக்கும், அவர் தருமபத்தினியார் பார்வதியம்மை யாருக்கும் அருந்தவத்தின் பயனாய்ச் சதாசிவேந்திரர் அவதாரம் செய்தார். இவர் கி. பி. 1738-ஆம் வருஷம் அவ தூதராயும், பக்குவமடைந்த ஆன்ம ஞானியாகவும், புதுக் கோட்டை ராஜ்யக் காடுகளில் திரிந்த சமயம் விஜய ரகு நாதத் தொண்டைமான் என்ற அரசருக்கு உபதேசம் செய்ததாக ஆதாரமான சரித்திரக்குறிப்பு இருக்கிறது. இவர் படிப்பை முடித்துத் துறவை யேற்றுப் பக்குவ மடைந்து விளங்கிய அக்காலத்தில் முப்பது வயதிற்கு மேற் பட்டவராகக் கொள்ளுதல் பொருத்தமாகும். ஆகையால் அவர் 18-ஆம் நூற்றாண்டின் முதற் பத்தாண்டுகளுக்குள் அவதாரம் செய்தவர் எனக் கொள்ளுவது பொருந்தும்.

சதாசிவேந்திரரின் குருவானவர் பரமசிவேந்திரர் என்பவரென்றும், அவர் கும்பகோணம் காமகோடி பீடத்தை அலங்கரித்த பெரியாரென்றும், அவர் பதினாறும் நூற்றாண்டில் இருந்தார் என்றும், சதாசிவரும் அந்தப் பரமசிவேந்திரரிடம் உபதேசம் பெற்று இருநூறு ஆண்டுகளுக்கு மேல் வாழ்ந்தாரென்றும் கொள்பவருண்டு. பல யோக சித்திகள் பெற்று, ஆன்ம பரிபக்குவமடைந்த பெரியார் இருநூறாண்டுகள் வாழ்ந்திருப்பதில் வியப்பொன்றும் இல்லை. ஆயினும் இவ்வழியுமுடலை, ஆன்றவிந்தடங்கிய பெரியோர்கள் போற்றி இருநூறாண்டுகள் வைத்திருந்தார்கள் என்று சொல்வதில் விசேஷச் சிறப்பில்லை. ஆதிசங்கரர் மிக்க இளம் வயதிலேயே பரத கண்டத்தை இமயம் முதல் சேதுவரையில் பன்முறை கால் நடையாகவே சுற்றியலைந்து, பிற நிரீசுவர மதங்களைக் கண்டித்தடக்கி, மடங்களை ஸ்தாபித்து, அறிவாளிகளும் அறிவுக்கடலென அதிசயிக்கும் அரிய நூல்கள் பலவெழுதி மண்ணுடலை நீத்துள்ளார். அவ்வாறு பெரியோர்கள் செயற்கரியவைகளைச் சில நாட்களில் செய்துமுடிப்பார்கள். அருஞ்செயல்களல்லது ஒருவரின் நீண்டவாழுள் அவரது பெருமையை விளக்குவதில்லை. குருவிற்கும், சீடருக்கும் சிறப்புச் செய்யும் நோக்கத்துடன் சதாசிவேந்திரரின் குரு காமகோடி பீடாதிபதியெனக் கொள்வது சரித்திர நோக்கத்திற்குப் பொருந்தாது. 1738-ஆம் வருஷமே சிறந்த பரிபக்குவமடைந்த சதாசிவர், அச்சமயம் முப்பது நாற்பது பிராயத்தவராகவோ அதனினும் சிறியவராகவோ இருந்தார் எனக்கொள்வது சிறப்பாகும்.

"விளையும் பயிர் முளையிலே தெரியும்" என்ற மூதுரை பிழைபட்டதன்று. சிறுவயதில் சிவராமகிருஷ்ணன் என்ற

இயற்பெயருடனும், பிச்சுக்குப்பன் என்ற செல்லப் பெயருடனும் வழங்கிய சதாசிவர், சிறுவயதிலேயே எண்ணெழுத்துக்களைப் பிழையறக் கற்றறிந்தார். இடையூறில்லாமல் படிப்படியாக வடமொழியைத் திறமையுடன் கற்கலானார். அவரவர் வாழ்விற்குத் தக்கபடியே அவரவர் இளமையும் அமையும். சதாசிவர் பிற்காலத்தில் சொற்சுருக்கத்துடனும் பொருள் நிறைவுடனும் அரிய நூல்களை எழுதவேண்டியதற்கு அவசியமான சம்ஸ்கிருத ஞானத்தைப் பெற்றுவிட்டார். வாழ்க்கையை வீணாக்காது, விநாடியும் கணக்கெடுக்கும் அக்கறையுடன் அவர் அருங்கலைகளைக் கற்கும்பொழுதே, வைதிக சம்பிரதாயப்படி உரிய காலத்தில் உபநயனமும், கல்யாணமும் இவருக்கு நடந்தேறின. சிறு வயதிலேயே கல்யாணம் நடந்தேறினும் அவர் வித்தியாப்பியாஸத்திற்கு அது இடையூறாக நிற்கவில்லை. அவர் மேலும் ஊக்கமாகவே கலைகளைப் பயின்று வந்தார். ஆசிரியனிடம் பக்தியுடனும், வித்தையில் சிரத்தையுடனும், விடா முயற்சியுடனும் அவர் கலைகளைப் பயின்று வருங்காலத்தில், ஒரு நாள் அவர் வீட்டில் ஒரு நிகழ்ச்சி நிகழ்ந்தது. அந்த நிகழ்ச்சியே சிவராமகிருஷ்ணனாகிய இளைஞனைச் சதாசிவேந்திரராக மாற்றியது.

# அத்தியாயம் மூன்று

## துறவு பூண்டது

ஒருநாள் சிவராமகிருஷ்ணனின் மனைவியார் பருவமடைந்ததாக அவர் மாமனார் வீட்டார்கள் கல்யாணம் சொல்ல வந்தார்கள். வந்தவர்களை உபசரித்து, சந்தர்ப்பத்திற்குத் தக்க விருந்து முதலியவைகளைச் செய்வதில் அவர் தாயார் ஊக்கமாக இருந்தார். விருந்திற்கான பலவித பக்ஷணங்களைத் தயாரிப்பதில் சற்றே பொழுது பிடித்தது. தினசரி மத்தியான்ன போஜனவேளைக்குச் சமையல் முடிவு பெறவில்லை. சிவராமகிருஷ்ணர் ஆசிரியருடைய வீட்டிலிருந்து வழக்கம்போலக் குறிப்பிட்டநேரத்திற்கு வந்தார். வீட்டில் ஆரவாரமும் உற்சாகமுமிருந்ததே யொழிய, சாப்பாடு தயாராக இருக்கவில்லை. சிவராமகிருஷ்ணருக்குப் பசி அதிகமாயிருந்தது. ஆசிரியர் அறிவுப்பசியை அக்கறையாக ஆற்றியதனால், உடற்பசி தலையெடுத்து நின்றது. வழக்கம்போல அன்புடனும் ஆதரவுடனும் தாயார் தம்மை வரவேற்று அன்னமிடுவார் என்று வேகமாக வந்தார். தாயார் ஏதோ பரபரப்புடன் வேலையில் ஈடுபட்டிருப்பதையும், தமக்கு அன்னமிடத் தயாராயில்லாமலிருப்பதையும் கண்டு ஏமாற்றமடைந்தார். தாயாரை ஏன் தாமதமெனக் கேட்டார். தாயார் கல்யாணம் கொண்டாடுவதில் தாமதம் ஏற்படுவது சகஜந்தான் என்று சொன்னார். இந் நிகழ்ச்சியில் விந்தை யொன்றுமில்லை. ஆயினும் தாயார் கூறிய பதில் சிவராமகிருஷ்ணரை ஆழ்ந்த சிந்தனையில் ஆழ்த்தியது.

கல்யாணம் நடந்தபொழுது இன்னும் சிறுவயது. கொட்டும் முழக்கும், கேலியும் கேளிக்கையும், பக்ஷணமும் பலகாரமும் அன்று சிவராமகிருஷ்ணரை லேசாகக் கட்டுப்படுத்திவிட்டன. இன்றும் அதைப்போன்ற சந்தர்ப்பமே. மனைவி வயதடைந்த சமயமும், விருந்து, சந்தோஷம் ஆகியவற்றிற்குரிய சந்தர்ப்பமே. ஆயினும் சிவராமகிருஷ்ணர் அன்றையினும், அதிக உள்நோக்கையும், அறிவையும் பெற்றுவிட்டார். நிகழ்ச்சிகளை அளவிட்டறியக்கூடிய அவருடைய நுட்ப புத்தி வேலை செய்யத் தொடங்கியது.

மனைவியுடன் இல்வாழ்க்கையைத் தொடங்க இனியும் சிலநாட்கள் இருக்கின்றன. அதைத் தொடங்கவுள்ள ஒரு படி இன்று ஏறவேண்டியதாயிற்று. இன்றே சாப்பாட்டிற்குத் தட்டு ஏற்பட்டு விட்டது. இல்வாழ்க்கை உடல் நலத்தையும் சுகத்தையும் பெறுவதற்காக அல்லவா? அப்படி இருக்க அதை ஏற்குமுன்னரே பசித்த வயிற்றுக்கு அன்னம் கிடைப்பது அரிதாகிவிட்டது! இல்வாழ்க்கை யென்பதே சுகமில்லாத வாழ்கையைக் குறிக்கும் சொல்லோ? நாளை மனைவி வந்து பல குழந்தைகளைப் பெற்ற பிறகு வீட்டுக் கவலைகள் பெருகியதும் சாப்பாடு கூப்பாடாக மாறிவிடாதா? குழந்தைகள் என்றும் மீளாத் துயரத்திற்கு நிலைக்களமன்றோ? அவர்களால் கிடைக்கும் சுகம் அணுவினுஞ் சிறியதாக, அவர்களால் உறுதியாகக் கிடைக்கப்பெறும் துன்பம் கடலினும் பரந்ததன்றோ? விளையாட்டாகவும், தெரிந்தும், தெரியாமலும் ஏற்றுக் கொண்ட மனைவாழ்க்கையை இன்றே விட்டுவிடுவது சிறந்ததல்லவா? வெளியினின்றும் எட்டிப் பார்க்கும் பொழுதே இருட்டாகத் தெரியும் குகைக் குள்ளே

புகுந்து வழி தடுமாறி மடிவதைவிட வெளியில் நின்றபடியே உள்ளே புகாமல் பரந்த ஒளி வீசும் வெளியில் ஓடிவிடுவது சிறந்ததல்லவா? இவ்வாறு பலபடியாகச் சிந்தனை செய்தார். பருவுடலில் எழுந்த பசியானது திடீரெனப் பெரும் பேரின்பத்தை நுகரத் தூண்டும் பெரும்பசியாய் மாற, அவருக்கு மனோதிடத்தைக் கொடுத்தது. தர்க்கவாதிகள் தொன்னைக்கு நெய் ஆதாரமா, நெய்க்குத் தொன்னை ஆதாரமாவென்று பரீக்ஷித்து வாழ்க்கையின் பெரும் பயனை இழக்கட்டும். ஜன்மாந்தரத்திலேயே பரிபக்குவம் பெற்றவர்களும், இறைவனின் திருவருள் நிறைந்தவர்களும் அவ்விதம் வீண் தர்க்கம் செய்கின்றவர்களல்ல. சிவராமகிருஷ்ணர் பூர்வ புண்ணியம் நிறைந்தவராகையால் அச்சிறு நிகழ்ச்சியே அவருக்குப் பெருங் குருவும் கொடுத்துதவாத உபதேசமாக மாறியது. அப்படியே வீட்டிலிருந்து வெளியேறினார். இனி இல்வாழ்க்கை தமக்கில்லையென்றும், துறவு பூணுவதைத் தவிரத் தமக்கு உய்ய வேறு வழியில்லையென்றும் நிச்சயம் செய்துகொண்டார்.

சிறுபொழுது சாப்பாடு தாமதப்படுவதற்காகத் துறவைப் பூணுவது வியப்பிற் சிறந்த செயல். வெளிப்படையாக அது அப்பொழுதே முளைத்தெழுந்து முடிவதாகக் காணப்படினும், அதன் ஆழ்ந்த முளை என்றோ முளைக்க ஆரம்பித்திருக்க வேண்டும். ஒரு காதற்ற ஊசியைக் கண்டு பட்டினத்தார் 'பாரனைத்தும் பொய்யென'த் துறவு பூண்டு, தம் பெரும் பொருளை வாரியிறைத்தார். அம்பு பாய்ந்து ரத்தம் பெருக நலியும் ஒரு புறா, மெலிந்து வாடும் ஒரு கிழவன், அழலிலழிக்கப்பட எடுத்துச் செல்லப்படும் ஒரு பிணம் இவைகளைக் கண்ட மாத்திரத்தில், அரசிளங்குமரன் சித்தார்த்தன், பரந்த ராஜ்யத்தையும்,

செல்வ வாழ்க்கையையும், இளமையும் வனப்பும் மிக்க மனைவியையும் நீத்து, காடு சென்று கடுந்தவம் புரிந்தான். மலையுச்சியில் சிவலிங்கத்தைக் கண்டு அது ஆகம சாஸ்திர முறைப்படி அமைந்த சிலையெனக் கொள்ளாது அதையே குடும்பப்பனுகக் கொண்டு, அதை நீங்காது காத்துக் காத்து, பணிவிடை செய்து, அச்சிலையின் கண்கள் ஒவ் வொன்றுகப் பழுதுபட அவ்வவ்விடங்களில் தம் இரண்டு கண்களையும் பறித்தெடுத்து அப்பிஞர் கண்ணப்பர். இவைபோன்று நிகழும் நிகழ்ச்சிகளும் உலக நியா யங்களைக் கொண்டே விளக்கப்படுவன வல்ல. அந் நிகழ்ச்சிகள் நம் சிற்றறிவிற்கு விளங்காத முன் பின் தொடர்புகளையுடையவை. அவ்வித நிகழ்ச்சிகளில் ஒன்றே சிவராமகிருஷ்ணன் என்ற மாணவனை, இல்வாழ்க்கையில் நுழையவிருந்த வாலிபனை, துறவியாகவும் பிரம்ம ஞானி யாகவும் செய்தது.

சிவராம கிருஷ்ணர் துறவுபூண்ட விவரம் இதுதான். இதற்கு முன்பே அவர் மதுரையில் தம் படிப்பை முடித்துத் திருவிசைநல்லூர் சென்று, ராமசுப்பா சாஸ்திரி கள் என்னும் கல்வியிற் பெரியாரிடம் வேதாந்த பாடங் கேட்டாரென்றும், அவ்விதம் அங்கே படித்துக் கொண்டி ருக்கும் பொழுதோ, படித்து முடிந்த பிறகோ ஒரு சமயம் தம்மூருக்கு வந்தபொழுது அவர் துறவு பூண்டா ரென்றும் சிலர் கூறுவர். ராமசுப்பா சாஸ்திரிகள் என்ற பெரியவரிடம், சதாசிவர், 'அய்யாவாள்' என்ற சிறப்புப் பெயருடன் விளங்கும் ஸ்ரீதர வேங்கடேசர், பிறகு போதேந்திர ஸ்வாமிகளாய்மிளிர்ந்தவர், பிக்ஷாண் டார் கோயில் மகாபாஷ்யம் கோபாலகிருஷ்ண சாஸ்திரி கள் இவர்கள் பாடம் கேட்டார்களெனவும் சொல்வர்.

திருவிசைநல்லூரில் சதாசிவேந்திரர் படித்தது வேதாந்த சாஸ்திரம். ஸ்ரீதர வேங்கடேசர் மைசூர் நாட்டில் ராஜ்யாதிகாரம் வகித்தவரென்றும், அதைவிட்டுப் பிறகு திருவிசைநல்லூர் வந்தவரென்றும் சொல்லப்படுகின்றது. வேதாந்தம் படித்ததனாலேதான் சதாசிவர் துறவு பூண்டார் என்று துணிவதற்கும் நியாயமில்லை. மற்றப் பாடங்களைப்போல வேதாந்தமும் படித்து, அதைப் பிறருக்குப் புகட்டிப் பணம் சம்பாதிக்கச் சாதனமாக வைத்துக்கொள்வது, இன்றுபோலவே, பண்டையிலும் நிகழ்ந்ததொன்று. பண ஆசையில்லாவிட்டால் வித்தியா கர்வமேனும் மனிதனை உந்தித் தள்ளும். வாழ்க்கையை மாற்றவும் அமைக்கவும் உண்டாகும் துணிவிற்கும் ஒருவனது படிப்பிற்கும் நெருங்கிய தொடர்பை நாம் அவசியமாகக் கொள்ளவேண்டியதே யில்லை. ஓதியுணர்ந்தும், பிறர்க்குரைத்தும், தான் அடங்காப்பேதையர்கள் இன்றும் எவ்வளவோ பேர்கள் இருக்கின்றார்கள். கசடறக் கற்றபின் அதற்குத் தக்க வாழ்க்கையை மாற்றியமைக்கின்ற பெரியோர்கள் மிகச் சிலரே. தாம் பெற்ற கல்வியையும், அறிவையும் பிறர் எவ்வளவாகப் புகழினும், நம்மை வானுயர் தோற்றம் பெற்றவராக மதிக்கினும், மனிதருக்கு முதலாவதாகத் தன் மதிப்பும் திருப்தியும் வேண்டும். தம்மனம் தம்மைக் கண்டிக்கும்பொழுது, பிறர் புகழ்ச்சி தம்மைப் புண்படுத்துவதாகவே நிற்கும். பிறர் தம்மைப் புகழினும், தம்மாதரவில்லாத மனிதவாழ்க்கை சிறிதளவும் பயனற்றதெனத் துணிவது மிகச் சிலருக்கே கூடுவதொன்று.

---

# அத்தியாயம் நான்கு

## துறவின் நிறைவு

---

துறவு பூண்டதும் சதாசிவர் வீட்டை விட்டகன்று சற்குருவை நாடியடைந்தார். அவர் தம்முடைய நூல்களில் பலவிடங்களிலும் பரமசிவேந்திரர் தம் குருவென்று பாராட்டி எழுதியிருக்கின்றார். பரமசிவேந்திரர், சதாசிவேந்திரருக்கு ஆத்ம ஞானத்தைச் செவ்வனே விளக்கினார் என்றும், சதாசிவேந்திரர் பூத உடலுடன் விளங்கும் தம் குருநாதரைப் பரம்பொருளெனத் திடநம்பிக்கை கொண்டிருந்தாரென்றும், அவரிடத்து ஆழ்ந்த பக்தி கொண்டிருந்தாரென்றும் முடிவாகத் துணியலாம். தாயினும் நீண்டு பாயும் வேங்கைக் குட்டியைப் போல, குருவினும் சீடன் மேன்மையுறுவதை வைதிகர்களும் பிறரும் போற்றுகின்றார்கள். தம்மினும் தம் சீடர் சதாசிவேந்திரர் ஆன்ம பரிபக்குவத்தை அடைந்ததை அறிந்து குருவும் வியந்தார். உலகமும் வியக்கின்றது. சதாசிவேந்திரர் பரம சிவேந்திரருடன் எவ்வளவு காலம் தங்கினாரென்றும், என்று அவர் அனுமதியுடன் தேசசஞ்சாரம் மேற்கொண்டாரென்றும் விவரமாகக் கூற ஆதாரங்கள் இல்லை. எனினும் அவர் நுண்ணறிவும், தீர்ந்த வைராக்கியமுமுள்ளவராகையால் மிகச் சிலகாலமே குருநாதருடன் தங்கியிருக்கலாம்.

துறவு பூண்ட பிறகு அவர் மௌன விரதம் மேற்கொண்டார் என்பதை விளக்க ஒரு கதை கர்ண பரம்பரையாக வருகின்றது. நுண்ணறிவு மிக்க சதாசிவேந்திரர்

தர்க்கத்தில் உற்சாகம் கொண்டு தம் குருவிடமுள்ள மாணவர்களையும் சந்தேகம் கேட்க வரும் மற்றவர்களையும் தம் நாவன்மையால் வாயெடுக்காமல் மடக்கியே வந்தார். குருபரரானவர், நாவன்மையையும், நுண்ணிய நூலறிவையும் மெச்சினாரேனும், சதாசிவர் வாதத்திலேயே அக்கறை கொண்டு, வாதத்தின் பொருளை மறந்து விடுவாரோ என்று பயங்கொண்டு தம் சீடரைக் கண்டித்தார். ஒருநாள் சதாசிவர் பிறரை வாய்மடக்கும்பொழுது, " சதாசிவா, உன் வாய் அடைக்காதா?" என்று சினந்து சொன்னாராம். குருநாதர் சினந்து சொன்னாலும், அவ்வுபதேசத்தின் பொருளைச் சதாசிவர் ஒரு விநாடியில் உணர்ந்து, அவ்விதமாகக் குருபரர் தம்மை மௌனத்தைக் கொள்ளும்படி ஆணையிடுவதாகக்கொண்டு அக்கணமே மௌனவிரதத்தை மேற்கொண்டார். அவருக்குச் சங்கீதத்திலும் பயிற்சி உண்டு. இன்னிசையுடன் பரமனைப் பாடுவது அவரையும் பிறரையும் பரவசத்தில் ஆழ்த்துவதாயிருந்தது. ஆயினும் மௌனவிரதம் மேற்கொண்ட அன்றுமுதல் பல நூல்களை எழுதினாரேனும் வாய்விட்டு ஓர் எழுத்தும் உச்சரிக்கவில்லை.

அகத்தூய்மையே சிறந்தது, புறத்தூய்மையெல்லாம் வெறும் வேஷம் என்று சொல்வோர் சொல்லுக. அகத்தூய்மை நிலைக்கப் புறத்தூய்மை இன்றியமையாததென்பதைத் தீவிர வைராக்கியமுள்ள சதாசிவரே விளக்குகின்றார். இளமையில் உலக வாழ்வை வெறுக்கும் மனோதிடம் பெற்றும், அவர் ஆன்ம அறிவைப் பெற்று அதில் அடங்க மௌனம் அவசியமென்றே அதைக் கைக்கொண்டார். ஆசிரமம் யாதாயினும் கட்டுப்பாடும் ஒழுங்கு முறையும் வேண்டும். அதைச்சதாசிவரே செவ்வனே விளக்குகின்றார்.

இன்றும் பண்டையிலும் காவி பூணுவதினாலேயே தாங்கள் துறவிகளாக வெளிக் கிளம்புகின்றவர்கள் பலர் இருக்கின்றனர். உடலையும் மனத்தையும் அடக்கி வைக்கக் கட்டுப்பாடு சதாசிவர் போன்ற பெரியோர்களுக்கும் வேண்டியிருந்ததெனில், நம்போன்ற சிறியோருக்கு எவ்வளவு அவசியமானது? மௌனமட்டு மல்லாமல் சதாசிவர் அவதூதத்தையும் மேற்கொண்டார். திசைகளே தமக்கு ஆடையாகக் கோவணத்தையும் நீத்தார். அவதூதத்தை மேற்கொள்பவர், காவியைக் கொள்பவரைப் போன்று, அவ்வளவு அதிகமாக ஜன சமுதாயத்தில் பழக முடியாது. வெயிலில் காய்ந்தும், பனியில் உலர்ந்தும், மழை காற்றுகளால் களைத்தும், காடு மேடுகளிலும் ஆற்றங் கரைகளிலும் வாழ்நாளை ஆன்மத் தியானத்தில் கழித்தார். பண்டைக் காலத்தில் சனகாதிகள் சுகர் முதலியவர்கள் வாழ்ந்தது மெய்யென விளக்கவே வந்தவர் போன்று விளங்கினார்.

மௌனமும் அவதூதமும் அவரைச் சமூகத்தினின்று விரட்டின. ஆயினும் பரமாத்மாவைத் தேடித் தேடி அலைகின்ற மகானுக்கு அதைப் பெற்று அநுபவிக்கும்வரை சமூகத்தினிடம் வேண்டியது யாதொன்றும் இல்லை. தீவிர வைராக்கியமுள்ள சதாசிவ முனிவரே சமூகத்தைக் கண்டு மிரண்டு அதை விட்டு ஓடினாரெனில் மற்றையோர் அதனுடன் பழகி மேன்மையுறுவது எப்படி? மிகக்கொடிய விரதம் மேற்கொள்ளச் சாதாரண மனிதர்களால் முடிவதில்லை. வைராக்கியம் மிகினும் மனிதனுக்குப் பசியில்லாமலா போகும்? அப் பசியையாற்றச் சமூகத்தை நீத்த ஒருவனுக்கு என்ன கிடைக்கும்? சொல்லில் மட்டுமன்றி, சுவையிலும் நாவை முற்றும் அடக்கியே தீரவேண்டும். இந்தக் கடுமையான விரதத்தை மேற்கொண்டதனால், அவர்

கிட்டினதைக் காட்டுத் தீப்போல் புசிப்பதன்றி விருப்பு வெறுப்புகளுடன் உணவை ஆராய்ந்ததில்லை. துறவிகள் இவ்விதம் கிடைப்பதையே கொள்வதை அஜகர விருத்தி யென்று சொல்வார்கள். நிலையாகவுள்ள மலைப்பாம்பு தான் உள்ள இடத்தில் இருந்துகொண்டு, எது தன் வழி வருமோ அதையே பற்றி விழுங்கும். துறவிகள் எதையும் பற்றி இழுக்காமல், எது கிடைக்கிறதோ அதைக் கொண்டு பசியாற்றிக்கொள்கின்றார்கள். அன்னோருக்கு ஜாதி மத பேதங்களும் அற்றுவிடுகின்றன. ஜாதி முறைகளையொட்டி, பிதைக்ஷ நியமங்களைக் கைக்கொள்ளுபவர்கள் சமுதாயத்தில் செல்வாக்குடன் இருக்கலாம். ஆனால் உண்மை அல்லாத பல சமூகக் கட்டுப்பாடுகளுக்கும் அவர்கள் கட்டுப் பட்டாக வேண்டும். அதனால் பற்றுக்கள் வளருமேயன்றி, அவை அற வழி ஏற்படாது.

ஆத்ம ஞானத்தையும், தீவிர வைராக்கியத்தையும் அடைந்த இப் பெரியார், அஷ்டாங்க யோக சித்தி 'களையும் பெற்றிருந்தார். மனத்தை அடக்கி, உடலைத் தம் வயப்படுத்துவதன் மகிமைகள் அநேகம். கிட்டும் சித்திகள் பல. ஆயினும் அச் சித்திகள் ஜால வேடிக்கைகளைப் போன்றவைகளே. அவைகளைப் பெருமுயற்சியினால் பெற்று, அவைகளைக் கொண்டே திருப்தி அடைகின்ற வர்கள், பெரியதிருக்க, சிறியதைக் கொண்டு மகிழ்ச்சி யடையும் சிறியவர்கள். ஒரு சீடன் பலவாண்டு முயன்று நீர்மேல் நடக்கச் சித்திபெற்ற செய்தியைத் தன் குருவி னிடம் மகிழ்ச்சியுடன் வெளியிட, அவர் அரையணா தோணிக்காரனுக்குக் கொடுத்து அக்கரை சேரும் சுலப வழியிருக்க, பல்லாண்டுகளை அவ்வீண் முயற்சியில் கழித் ததைக் கண்டித்தார். சதாசிவர் தாம் பெற்ற சித்திகளைக்

கொண்டு ஆனந்தம் அடைந்தவரன்று. அவைகளை விளையாட்டாகச் சிலவிடங்களில் வெளியிடினும் ஆத்மானந்தத்தில் லயித்துச் சித்துக்களை மறந்திருந்தார். சதாசிவரின் சித்து விளையாடல்களைப்பற்றிப் பல கர்ண பரம்பரைக் கதைகள் உண்டு. அக் கதைகள் பொய்யானவை யென்று சொல்லவேண்டியதில்லை. அவையினும் அரியவை சித்திகளால் நடைபெறும். ஆயின் அவைகளைக் கொண்டு இப் பெரியாரின் பெருமையை அளவிட வேண்டுவதில்லை.

அகந்தையை முற்றும் துறப்பதனாலேயே உடற்பற்று அற்றுவிடுகின்றது. அதிலும் ஆன்மத் தியானத்திலேயே ஈடுபட்டு நின்றால் உடலுணர்ச்சி போய்விடுகின்றது. உடலில் உயிர் இருந்தும், நடமாடினாலும் உணர்ச்சியே அற்றுவிடுகின்றது. உடலை முற்றும் மறந்து அதற்குக் கிட்டும் இன்ப துன்பங்களைப் பொருட்படுத்தாமலே, ஆன்ம தியானத்தில் நிலைத்துவிட்டார் சதாசிவேந்திரர். அவருக்கு யோகாப்பியாஸமும் இவ்விதமிருக்கப் பேருதவி செய்வதாயிருந்தது. சதாசிவர் உடலுணர்ச்சியற்றிருந்தவர் என்பதை விளக்க இரண்டு சம்பவங்களைக் குறிப்பது அவசியமாகும்.

ஒரு சமயம் இப் பெரியார் கொடுமுடிக்கருகில் ஆற்றங்கரையில் சமாதியில் உட்கார்ந்திருந்தார். திடீரென ஒரு வெள்ளம் வந்து, அவரை மறைத்துவிட்டது. கரையில் இருந்தவர்கள் பெரியார் மறைந்துவிட்டதற்கு வருந்தினார்கள். சில நாட்களுக்குப் பிறகு அவர் அங்கிருந்ததையும் மறந்துவிட்டார்கள். கோடையில், வாய்க்கால் வெட்டிக் குரம்பு பிடிக்க வேண்டிய காலம் வந்தது. காவேரி மணல் மேட்டை வெட்டினார்கள் கூலிக்காரர்கள். ஒருவனுடைய மண்வெட்டி ஏதோ ஒன்றைத் தாக்கு

வதைப்போல இருந்தது. அவன் மண்வெட்டியை வெளியே எடுத்துப் பார்க்கவும் அதில் இரத்தம் தோய்ந் திருப்பதைக் கண்டான். அனைவருக்கும் பயமுண்டா யிற்று. ஆயினும் ஜாக்கிரதையாகச் சுற்றி வெட்டிக் கொண்டு மணலைக் கலைத்தார்கள். அதுவரை பெரியவர் சமாதியிலேயே இருந்தார். மண் வெட்டி தாக்கிய தும், சமாதியினின்று விழித்தார். மணல் எடுக்கப்படவும் ஒன்றும் நிகழாததுபோன்று எழுந்து நடக்கலானார். அவர் உடலில் பட்ட மண்வெட்டிக் காயத்தையும், அதிலிருந்து இரத்தம் வடிவதையும் வேலையாட்கள் கண்டு திகைத் தார்கள். ஆயினும் அவருக்கு, வலியொன்றும் இருந்த தாகத் தெரியவில்லை; வழக்கம்போல் வேகமாகச் சென்று விட்டார்.

இதனினும் அதிசயமான சம்பவமும் இருக்கின்றது. சதாசிவர் அலைந்து திரிந்துகொண்டிருக்கும் சமயம், முகம் மதியச் சிற்றரசனுடைய கோஷாப் பெண்கள் உள்ள அந் தப்புரத்திற் கருகில் நடந்துகொண்டிருந்தார். ஆண் பெண், நிர்வாணம் உடைதரிப்பது என்ற பேத உணர்ச்சியற்ற பெரியார் ஆன்மாவில் லயித்து அவ்வழிச் செல்வதைக் கண்ட அச் சிற்றரசன் கடுங்கோபம் கொண்டு, சரேலென ஓடி அவர் கையொன்றை வாளால் எறிந்தான். கை வெட்டுண்டு நிலத்து விழுந்தது. வெட்டிய இடத்து இரத்தம் பீரிட்டு ஒழுக ஆரம்பித்தது. ஆயினும் கை வெட்டுப் பட் டுக் கீழே விழுந்ததையும், உடலிலிருந்து அருவிபோன்று இரத்தம் ஒழுகுவதையும் சதாசிவர் சிறிதும் உணராதவ ராய்த் தம் வழியே சென்றுகொண் டிருந்தார். கையை வெட்டியவுடன் அச் சிற்றரசனுக்குக் கோபம் தணிந்தது. பெரியார் சிறிதும் கவனமின்றியே நடந்துசெல்வதைக்

காண அவனுக்கு வியப்புத்தட்ட ஆரம்பித்தது. ஒரு சிறு முள் குத்தினுலும் கலங்கும் மனித இயல்பை அறிந்தவன், கையே வெட்டுண்டு விழுந்துங்கூட அதைப் பாராட்டாத ஒருவரைக் கண்டு திகைத்துப்போனன். அவர் யாரோ வென்று பயப்பட ஆரம்பித்தான். சதாசிவர் அவனைத் திரும்பியும் பார்க்காது தம் வழியே சென்றுகொண்டிருந்தார்.

அச் சிற்றரசன் பெரியாரைப் பின்தொடர்ந்து நடந்தான். சிறிது தூரம் செல்லவும், அவனுக்குப் பயமும் பச்சாதாபமும் அதிகரித்தன. பெரியவர் முன்பாக ஓடி, அவரை வழிமறித்து, அவர் கால்களில் பணிந்தான். தான் அறியாது கோபத்தால் செய்த அடாத செய்கையைப் பொறுத்தருள மன்ருடிக் கேட்டுக்கொண்டான். வழி மறிக்கப்பட்டு நின்ற அச்சமயந்தான் சதாசிவர் நிகழ்ந்ததை உணர்ந்தார். மற்ருெரு கையினுல் வெட்டுண்ட கையைத் தடவினுர். ஒன்றும் நிகழாததைப் போன்றும் காயமின்றியும் இரத்தக் குறிப்பின்றியும் முன்போலவே அவருடைய கை உரிய இடத்தில் விளங்கிற்று. இத் தெய்விகத்தைக் கண்ட அவ்வரசன் வியப்பும் மகிழ்ச்சியும் கொண்டு, அவரது அடிகளை விட்டு நீங்காதவனுய் அவருடைய அருளை வேண்டினுன். சமயங்களுக்கும் சம்பிரதாயங்களுக்கும் எட்டாத அப் பெரியாரின் தெய்விக சக்தியை உணர்ந்து அவருடைய அநுக்கிரகத்திற்கும் பாத்திரனுகி விட்டான்.

இந் நிகழ்ச்சி மிகப் பெரியோர்களின் வாழ்க்கையில் அபூர்வமாக நிகழ்வது. உடலுணர்ச்சி முற்றும் அறுவதும், அதனினும் அரிய கடுமையும் எங்கோ எப்பொழுதோ காணக் கிடைப்பவை. சதாசிவர் ஆன்ம பரிபக்குவமடைந்த நாள்தொட்டு இவ்வாறு உடலுணர்ச்சியை அகற்றி வாழ்ந்

தவர். அவயவங்கள் வெட்டப்படுவதையே உணராது செல்லுகின்ற பெரியவருக்கு, வெயிலும் மழையும், பனியும் காற்றும், கொசுவும் பூச்சியும் எம்மாத்திரம்? நிலையின்றி அவர் காடுகளில் தன்னந் தனியாகத் திரிந்தும், கிடைத்ததை ஆராயாது சாப்பிட்டதும், பிறருடைய மதிப்புஅவமதிப்புகளை ஏற்காமல் வாழ்ந்ததும் ஆகிய எல்லாம் அவர் ஆன்மத் தியானத்தில் நிலைபெற்றிருந்த தனால் கூடின. நுண்ணிய அறிவால் பரத்தை அறிந்து, வைராக்கிய சித்தத்துடன் அவ்வுண்மைக்குப் பொருந்த வாழ்ந்து அவர் வாழ்க்கையை நிறைவுள்ளதாகச் செய்தார்.

பூர்வ புண்ணியமும், ஜன்மாந்தர சம்ஸ்காரமும் பெற்றிருந்த சதாசிவர் படிப்படியாகவே உயர் நிலையை அடைந்தார். தாயார் சொன்ன ஒரு விடை அவரைத் துறவியாக்கியது. குருநாதர் சொன்ன ஒரு சொல் அவரை மௌனியாக்கியது. இவ்விதமாகப் பல நிகழ்ச்சிகளும் அவருடைய பரிபக்குவத்தை வளர்க்க உதவின. ஒரு சமயம் எங்கோ திறந்த வெளியில் படுத் திருக்கும்பொழுது, தலைக்கு உயரமாக மண்ணைக் குவித்துக்கொண்டார். அவ்வழியே சென்றவர்கள், "உலகை முற்றுந் துறந்தவர்களுக்கும் தலையணை வேண்டி யிருக்கின்றதே!" என்று வியந்து சொன்னார்கள். அவர்கள் சொன்னது காதில் விழவும், மறுநாள் அதே இடத்தில் தலைக்கு மண் குவியலின்றிப் படுத்திருந்தார். அன்று அவ்வழி சென்றவர்கள், "நாம் நேற்றுச் சொன்னதைக் கேட்டுத் துறவிக்கும் கோபம் வந்துவிட்டது பாருங்கள்" என்று சொன்னார்கள். உலகோர் வார்த்தைக்குச் செவி கொடுக்கும் குறையை முற்றும் அகற்ற வேண்டுமென்று சதாசிவருக்கு, இச்சம்பவம் விளக்கியிருக்க வேண்டும்.

இந் நிகழ்ச்சியைச் சொல்லக் கேட்ட ஸ்ரீதர வேங்கடேசர் சதாசிவருக்கு முற்றும் அகந்தையை விடுவதன் அவசியத்தைப் புட்டினாராம்.

# அத்தியாயம் ஐந்து

## பல திருவிளையாடல்கள்

அஷ்டமாசித்திகளைப் பெற்றவர்களுக்கு முடியாத தொன்றில்லை. இயற்கை நியதிகளையும் வேண்டுமாயின் அவர்கள் மாற்றக்கூடும். இயற்கையையே கட்டுப்படுத்து கின்றவர்களுக்கு அவர் விருப்பப்படி நிகழாததென்ன? சதாசிவர் அஷ்டமாசித்திகளை அடைந்த பெரியவர். அவர் அச் சித்திகளைப் பெரியனவாகப் பாராட்டியவரன்று. அவற்றை அவசியமானபொழுது, தம் லட்சியமாகிய ஆத்மானுபூதியை அடைய ஒரு சாதனமாகவே பயன் படுத்திவந்தார். அவர் அவ்விதம் சித்துவிளையாடல்கள் செய்ததைப் பற்றிப் பல வரலாறுகள் வழங்குகின்றன. கர்ணபரம்பரைச் செய்திகள் பலவாயினும் சிலவற்றை மட்டும் குறிப்பது போதும்.

சதாசிவர் கருவூர்ச் சோலைகளில் திரிந்துகொண்டிருக் கும் பொழுது நடந்தது இது. அவர் குழந்தைகளுக்கும் பெரும் தோழராயிருந்தார். குழந்தைகள் அவரை மற்ற வயது வந்தவர்களினின்றும் பிரித்தறிந்து, அவரிடத்தில் நம்பிக்கைகொண்டு அவருடன் நெருங்கிப் பழகினார்கள். சதாசிவர் தமக்கு யாராவது கொடுக்கும் தின்பண்டங்களை வைத்திருந்து குழந்தைகளுக்குக் கொடுப்பார். குழந்தை களும் அவரை விடாது சுற்றியே வந்தார்கள். ஒரு நாள் குழந்தைகள் மதுரைத் திருநாளைக் கேள்விப்பட்டு, தாங் கள் மதுரைக்குப் போக ஆசைப்படுவதாகவும், தங்களை அழைத்துப்போக வேண்டுமென்றும் அவரிடம் மன்றாடி னார்கள். சதாசிவர் அவர்களை அழைத்துப்போவதாக ஒப்புக்கொண்டார். குழந்தைகளைத் தம் முதுகிலும்

தோள்களிலும் ஏற்றிக் கொண்டு, கண்ணை மூடிக் கொள்ளச் சொன்னார். குழந்தைகள் கண் விழித்துப் பார்க்கும் சமயம் அவர்கள் அனைவரும் மதுரையம்பதியில் இருப்பதைக் கண்டார்கள். அப்போது சோமசுந்தரப் பெருமான் ரிஷபாரூடராகப் பவனி வந்துகொண்டிருந் தார். அப்பெரிய கோவிலையும், அங்குள்ள ஆரவாரத்தை யும் கண்டு குழந்தைகள் வியப்படைந்தார்கள். பெரிய வரும் குழந்தைகளுக்குப் பக்ஷணங்களைச் சேகரித்துக் கொடுத்தார். குழந்தைகள் சிறிதுபொழுது உல்லாச மாகக் கழித்து ஊருக்குத் திரும்பும் விருப்பத்தை வெளி யிட்டார்கள். முன்போலவே சதாசிவர் குழந்தைகளை ஏற்றிக்கொண்டு, கண்மூடிக்கொள்ளச் சொல்லி அடுத்த கணம் திருமாங்லையூரில் அவர்களை இறக்கிவிட்டார். குழந் தைகள், கைகளிலுள்ள மீதிப் பக்ஷணங்களுடன் வீடு சென்றார்கள். வீட்டில் உள்ளவர்களிடம் தாங்கள் மது ரைக்குப் போய்வந்த வைபவத்தைச் சொல்லி, தங்களிட முள்ள மீதிப் பக்ஷணத்தைக் காட்டி விளக்கினார்கள். அன்றிரவு குழந்தைகளை வீட்டில் காணவில்லை. ஆகவே அவர்கள் கதை நம்பத்தக்கதா யிருந்தது. சதாசிவர் சித்தி பெற்றவர் என்பதைத் திருமாங்லையூரில் சிலராவது அறிந்தவர்களே. அவர்கள் அந்தக் குழந்தைகளுக்குக் கிடைத்த பெரும் பாக்கியம் தங்களுக்குக் கிடைக்க வில்லையே என்று ஏங்கினர்.

அவர் நெடுவழி சென்றுகொண்டிருக்கும்பொழுது நள்ளிரவில் அளக்காது குவித்திருந்த ஒரு நெற்குவியலின் அருகே சென்றார். காவலாளர்கள் அவரை யாரோ திருடன் என்று கொண்டு, ஒரே அடியாகப் புடைக் கக் கையை ஓங்கினார்கள். ஓங்கிய கைகளை அவர்

கோவிலூர் ஆதீனம்
1137



கள் கீழே தாழ்த்த முடியவில்லை. அவர்கள் உடனே உண்மையை அறிந்துகொண்டு பெரியவராகிய இவரை அவமதித்து விட்டோமேயென்று மனம் புழுங்கி, கையை இறக்கக்கூடாதவர்களாய் நின்றார்கள். பெரியவரும் இடம் பெயராது அங்கே நின்றார். காலையில் நிலக்காரன் களத்திற்கு வந்தான். காவலாளர்கள் ஓங்கிய கைகளுடன் கல்தூண்களைப்போல நிற்பதையும், அவதூதரான மௌனி ஒருவரையும் கண்டு, ஏதோ அப்பெரியவருக்கு அபசாரம் நடந்து விட்டதெனக்கொண்டு நடுங்கி, பெரியவர் கால்களில் விழுந்தார். சதாசிவர் இடம் விட்டுப் பெயர ஆரம்பித்தார். காவலாளர்களின் கைகளை அப்போதுதான் இறக்க முடிந்தது. அவர்கள் பெரியாரின் திருவடிகளில் வீழ்ந்தார்கள்.

மற்றொரு சமயம் ஒரு கிராமத்தில் அரசாங்க அதிகாரி ஒருவர் முகாம் செய்துகொண்டிருந்தார். அன்றல்ல, இன்றும் கிராமங்களில் அதிகாரிகள் முகாம் செய்வதாயின் அங்கு அல்லோல கல்லோலந்தான். வந்த அதிகாரியின் சமையல் கூடத்திற்கு விறகு சேகரிக்கப் பல சிப்பந்திகள் கட்டைகளை வெட்டிக் கட்டாகக் கட்டிவைத்தார்கள். அவர்களுக்கும் அதிகமாகச் சுமையிருந்தது. அச்சமயம் அங்கே சென்றுகொண்டிருந்த சதாசிவரை யாரோ காட்டுமிராண்டியெனக் கொண்டு, அவரை நிறுத்தி அவர் தலையிலும் ஒரு விறகுச் சுமையை ஏற்றித் தங்களுடன் இட்டுச் சென்றார்கள். சதாசிவர் ஒன்றும் பேசாமல் பொதிமாட்டைப்போன்று கட்டையைச் சுமந்து சென்றார். மற்றவர்கள் சுமையைப் போடும் இடத்தில் தாமும் சுமையைப் போட்டார். திடீரென அக்குவியலில் தீப்பற்றிக் கொண்டது. அனைவரும் திகைத்துப்போனார்கள். முகாம் போட்டிருந்த அதிகாரியும் மற்றவர்களுமாக அவ்விடத்தில்

திரண்டுவிட்டார்கள். அனைவருக்கும் அப்பொழுது சதாசிவரின் பெருமை விளங்குவதாயிற்று. அனைவரும் அவரடிகளில் வீழ்ந்தார்கள். கட்டாயமாகச் சுமையை ஏற்றிய பொழுதும், இப்பொழுது அனைவரும் அடிகளில் தாழும் பொழுதும் அவர் முகவிலாசம் ஒன்றாகவே விளங்கியது. அவர் நடந்து அப்பால் ஏகினார். அனைவரும் பெருவியப்பில் மூழ்கி நின்றார்கள்.

கோகுலாஷ்டமி, சிவராத்திரி முதலிய விசேஷ நாட்களில் சதாசிவர் பல க்ஷேத்திரங்களிலும் ஏக காலத்தில் தரிசனம் கொடுத்ததாகச் சொல்லப்படுவதுண்டு. அவர் மனத்தில் அர்ச்சனைகளைச் சொல்லும் பொழுதே மேலிருந்து புஷ்பங்கள் முறையாக மூர்த்திமேல் விழுந்ததாகவும் சொல்வர். இவையெல்லாம் சித்தி வன்மையால் ஆகுபவை.

அக்ஷர வாசனையில்லாத ஒரு பிராமணப் பிரம்மசாரி இப்பெரியாரைப் பின்தொடர்ந்து அவரை நீங்காது நின்று வந்தான். சதாசிவர் அவனுடைய பக்தியை ஏற்றுக் கொண்டு அவன் தம்முடன் வருவதை ஆக்ஷேபிக்காதிருந்தார். ஒருநாள் சீடன் ஸ்ரீரங்கநாதரை தரிசிக்கவேண்டுமென்ற தன் விருப்பத்தைச் சதாசிவரிடம் சொன்னான். சதாசிவர் அவனைக் கண்ணை மூடிக்கொள்ளச் சொன்னார். கண்விழித்ததும் அவனும் சதாசிவரும் ஸ்ரீரங்கநாதர் முன்பு நின்றுகொண்டிருந்தார்கள். அடுத்த கணமே சதாசிவர் திடீரென மறைந்துவிட்டார். பிரம்மச்சாரி தன் குருவைத் தேடி யலைந்தான். முடிவாக நெரூர் வரவும் தன் குருநாதனைக் கண்டுகொண்டான். அவ்விந்தையான நிகழ்ச்சியைப் பலருக்கும் சொன்னான். விடாது பின்தொடர்ந்து, பணிவிடைசெய்து உண்மை

யான குருபக்தியுடன் நிற்கும் சீடனுக்குச் சதாசிவர் மந்திர உபதேசம் செய்தருளினர். குருநாதருடைய அருளால் அக்ஷரவாசனை யில்லாத அப் பிரம்மச்சாரி மகா பண்டிதனாகிவிட்டான். புராணம் சொல்லுவதில் வல்லமை பெற்றான். அவன் கல்வித் திறமையைப் போற்றி, அரசர்களும் அவனுக்கு மான்யங்கள் கொடுத்தார்கள்; பரிசுகளும் வழங்கினர்கள். ஆகாச புராண இராமலிங்க சாஸ்திரிகள் என்ற சிறப்புப் பெயருடன் விளங்கிய அவன் சந்ததியார்கள் இன்னும் நெரூரில் வசித்து வருகின்றார்கள்.

இவருடைய சித்தி வன்மையை யொட்டியே அவர் ஒரே காலத்தில் கராச்சி, மானமதுரை, நெரூர் முதலிய மூன்றிடங்களில் சமாதி அடைந்ததாகச் சொல்லப்படுகின்றது. அவ்விடங்களில் அவருடைய சமாதிகளும் இருக்கின்றன. அது விஷயத்தைச் சிருங்கேரி பீடத்தை யலங்கரித்த ஸ்ரீநரசிம்ம ஸ்வாமிகள், அவர் காரண ஸ்தூல சூக்ஷ்மமாகிய மூன்று சரீரங்களையும் மூன்றிடங்களில் நீத்தார் என்று சொல்லுவது பொருந்தும் என்று விளக்கினர்.

---

# அத்தியாயம் ஆறு

## சதாசிவரும் தொண்டைமானும்.

1730—1769 கி. பி. யில் புதுக்கோட்டை நாட்டை விஜயரகுநாதத் தொண்டைமான் அவர்கள் ஆட்சிபுரிந்து வந்தார். அவர் இயற்கையிலேயே தெய்வ பக்தியும், உண்மையை நாடுவதில் விருப்பமும் கொண்டவர். அரசராயினும் திருவரங்குளம் காடுகளில் தனித்தலைந்து தவமேற் கொண்ட உத்தமர். அவரைச் சிவஞானபுரம் துரையெனச் சிறப்புப் பெயர் கொடுத்து அழைப்பதுமுண்டு. தொண்டைமானரசர் காடுகளில் தனியாகத் திரியுங் காலத்தில் அக்காடுகள் வழியே சென்ற சதாசிவரைக் கண்டார். சதாசிவர் அவருடைய தூய மனத்தையும் ஆன்மஞானம் பெற அவர் கொண்டுள்ள அவாவையும் தெரிந்துகொண்டு அவர்மீது கருணைகொண்டு அவருக்கு உபதேசம் செய்தார். சதாசிவரோ மௌனி. அங்குள்ள மணலில் சில மந்திரங்களை எழுதி அவருக்கு உபதேசம் செய்து, தமது சகபாடியும் பதஞ்சலி மகாபாஷ்யத்திற்கு விருத்தியுரை எழுதியவரு மாகிய கோபால கிருஷ்ண சாஸ்திரிகளைக் கொணர்ந்து குருவாக வைத்துக் கொள்ளப் பணித்துச் சென்றார்.

அன்றுமுதல் அத்தொண்டைமான் சதாசிவருக்குச் சீடரானார். பிக்ஷாண்டார் கோவில் கோபாலகிருஷ்ண சாஸ்திரிகள் அரச சபைக்கு அழைக்கப்பட்டார். அவர் விதித்தபடி தக்ஷிணாமூர்த்திகோயிலில் விசேஷ ஆராதனங்கள் செய்யப்பட்டன. நவராத்திரியில் சிறப்பாகப் பூஜைகளும் தான தருமங்களும் ஏற்படுத்தப்பட்டன. அச்



கோவில் கோபுரம்

சமயத்தில் அத்தான தருமங்களுக்கெனவே புதிதாக அம்மன் காசும் அச்சிடப்பட்டது. அப் பல தருமங்களும் இன்னும் புதுக்கோட்டை அரசாங்கத்தாரால் பழுதின்றி நடத்தி வரப்படுகின்றன.

சதாசிவர் உபதேச மந்திரத்தை எழுதிய மணலை ஒரு பொற் பேழையிலிட்டு, அப்பெரியாரின் அறிகுறியாக அரண்மனையில் வைத்து அதைப் போற்றி வழிபட்டு வருகின்றார்கள். 1738-ஆம் வருஷம் சதாசிவரைத் தொண்டைமானரசர் கண்டநாள் தொட்டு அவ்வரச குலமும், புதுக்கோட்டை நாடும் சிறப்புப் பெருகி வருகின்றன. ஆயினும் வேந்தனும் துரும்பாகக் கருதும் அத்துறவி அக்கணமே அந்நாட்டின் எல்லையைக் கடந்து சென்று விட்டார். அவ்வரசர் ஆன்மஞானியை ஒருகணமே கண்டாராயினும் வாழ்க்கை நிறைவும் பயனும் பெற்றவரானார்.

# அத்தியாயம் ஏழு

## சதாசிவரின் நூல்கள்

---

சதாசிவர் மௌனத்தை மேற்கொள்ளினும் பல அரிய நூல்களையும் இனிய கீர்த்தனங்களையும் இயற்றியுள்ளார். அவருடைய சம்ஸ்கிருதக் கிருதிகள் பக்தி ரஸம் கனியப் பலரால் பாடப்படுகின்றன. இசை, இனிமை, பொருள் நிறைவு மூன்றும் பெற்று அவை விளங்குகின்றன. இன்று சதாசிவர் எழுதிய நூல்கள் இவைதாமென்று வரையறுத்துச் சொல்வதற்கில்லை. இன்றுவரை வெளிவராது, நாளை வெளிவரக்கூடியவையும் இருக்கலாம். ஸ்ரீரங்கம் வாணீவிலாச அச்சுக்கூடத்தார் சில நூல்களை சிறப்பாக வெளியிட்டு உலகிற்கு அரிய உதவியைச் செய்திருக்கின்றார்கள்.

பிரம்ம சூத்திர விருத்தி என்னும் சதாசிவரது நூல் மற்ற நூல்களினும் முக்கியமானது. பிரம்ம சூத்திரங்களே ஆன்ம அறிவுக்கு முதற்பாடம். அவை சிறியவையே யாயினும், அவைகளுக்குப் பல சமயாசாரியர்களும் தங்கள்தங்கள் கொள்கைகளுக்கு இணங்க உரைகள் எழுதியுள்ளார்கள். சங்கரரும் எழுதியுள்ளார். அத்வைதக் கொள்கைக்கிணங்கப் பிறரும் உரை எழுதியுள்ளார்கள். சதாசிவரும் உரை எழுதியிருக்கின்றார். பிரம்ம சூத்திரங்களுக்குப் பல உரைகள் இருப்பினும், அவை இவ்வளவு எளியநடையுடனும், தெளிவான விளக்கத்துடனும், நெருங்கிய சிந்தனையுடனும், நுண்ணிய புலமையுடனும் இல்லை. ஒவ்வொரு சூத்திர உரையிலும் பூர்வ பக்ஷத்தையும் சித்தாந்தத்தையும் தெளிவாக விளக்கியும், பூர்வபக்ஷ

சித்தாந்தங்களின் பல பேதங்களைக் குறிப்பிட்டும், ஒவ்வொரு சூத்திரத்தின் முன்னுரையிலும் அது முன் சென்ற சூத்திரத்துடன் நெருங்கி நிற்பதைக் காட்டியும், ஒவ்வொரு பாதத்திற்கும் அத்தியாயத்திற்கும் உள்ள தொடர்பை வெளியிட்டும் இருப்பது சதாசிவருடைய விருத்தியுரையின் விசேஷங்களாகும். தெளிவும் விளக்கமும் நிறைந்து, அனைவருக்கும் விளங்கும் விதம் அமைந்துள்ள இவர் சூத்திரவிருத்தி சங்கரபாஷ்யத்தின் உட்பொருளைச் சங்கிரகித்துத் தருகின்றது. பாமரருக்கும் பண்டிதருக்கும் ஒப்ப உதவ நிற்பது இந்நூல்.

யோக சுகாதாரம் என்னும் யோக சாஸ்திர நூலையும் இவர் எழுதியுள்ளார். பதஞ்சலி மகாமுனிவர் எழுதிய யோக சூத்திரங்களுக்கு, அநுபவ நிறைவுடனும், நுட்ப விளக்கங்களுடனும் அருமையாக அந்தப் பாஷ்யம் அமைந்திருக்கின்றது.

சூத்திரவிருத்திகள் அல்லாமலும் சதாசிவர் பன்னிரண்டு உபநிஷத்துகளுக்குத் தீபிகைகளும் எழுதியுள்ளார். அவையன்றியும், சின்னூல்களாகிய ஆத்ம வித்தியா விலாஸம், சித்தாந்த கல்பவல்லி, அத்வைத ரசமஞ்சரி முதலிய நூல்களையும் எழுதியருளினர். ஆத்ம வித்தியா விலாஸம் ஆரியவிருத்தத்தில் 62 பாக்கள் அமைந்த நூல். அது ஆன்ம அநுபவம்பெற்ற யோகியின் தன்மையை விளக்குகின்றது. அந்நூலைப் படிக்கும் பொழுது சதாசிவரின் ஜீவிய சரித்திரத்தையே படிக்கின்றோமோ என்ற ஐயமும் நிகழ்கின்றது.

அப்பைய தீக்ஷிதர் எழுதிய சித்தாந்தலேச சங்கிரகம் என்ற வசனநூலைச் செய்யுளில் சித்தாந்த கல்பவல்லியாக எழுதியுள்ளார். அத்வைத ரஸ மஞ்சரி 52 பாட்டுகளில்

அத்வைத வேதாந்தத்தின் உட்பொருளை விளக்குகின்றது. இந்நூலைச் சதாசிவரின் சீடரான நல்லா தீக்ஷிதர் எழுதியிருக்கக் கூடுமென்று சிலர் சொல்லுகிறார்கள்.

சதாசிவர் எழுதிய பல நூல்களிலும் அமைதி நிறைந்த ஆன்ம யோகியின் தெளிவாய இனிமையும் நிறைவும் காணப்படுகின்றன. அவர் நடை. தெள்ளிய எளிய நடை. அவர் சிந்தனைகள் உயர்ந்தவை. ஒரு பெரிய ஆன்மாவின் கம்பீரப் போக்கை நாம் அந்நூல்களில் காண்கிறோம். அவரது கீர்த்தனைகள், பக்திச் சுவை ததும்புபவை; இசைக்கும் தாளத்திற்கும் பொருந்துபவை; அவைகளை மீண்டும் மீண்டும் பாடினும் சலிப்பு உண்டாவதில்லை. இந் நூல்களைக் கொண்டே, சதாசிவர் பெரிய ஆன்மயோகி என்பதைத் துணிந்து சொல்லி விடலாம்.

—



ஸ்ரீ சதாசிவர் ஸமாதி
(வில்வ மரமும், தாழ்வாரமும்)

# அத்தியாயம் எட்டு

## சமாதி அடைதல்

இவர் காவேரிக்கரைகளிலும் வடநாட்டிலும் சஞ்சரித்து வந்தார். காடோ நாடோ, இரவோ பகலோ என்பதில்லாது, அவதூதராயும், மௌனியாயும், குறியொன்றில்லாதவரைப் போல இருந்த இடத்திலிராது நடந்து நடந்து சென்று கொண்டே இருந்தார். இந்தியா முழுவதும் அதற்கப்பால் துருக்கிவரையும் இவர் சஞ்சரித்துள்ளார் என்று கூறுபவருண்டு. அவதூதராயும் அதிவர்ணாசிரமியாயும் இருந்த அவருக்கு, சிலவிடங்களில் ஆதரவும், சிலவிடங்களில் துன்பமும் உண்டாயின. அவர் அவைகளிரண்டையும் சிறிதும் பாராட்டியதில்லை. விருப்பு வெறுப்பு அற்ற மனத்தை அடைந்த பிறகு அவர் அவைகளைப்பற்றிக் கவலையுறவில்லை. அவர் சுற்றிவருங் காலத்தில் தொண்டைமான் அரசர் அவரைப் பணிந்ததை முன்பு சொன்னோம். தஞ்சாவூர் மகாராஷ்டிர அரசரான சரபோஜியும் அவரைக் கண்டு அவரிடம் அநுக்கிரகம் பெற்றதாகவும் கர்ணபரம்பரை சொல்கின்றது. சதாசிவரின் ஆணையை ஏற்றே அம்மன்னர் சரஸ்வதி மஹாலை ஏற்படுத்தியதாகவும் சொல்பவருளர். நூலறிவு நிறையப் பெற்று, அது பேரறிவிக்கு உதவுவதைத் தாமே அநுபவிக்கும் சதாசிவர் அவ்விதம் ஆஞ்ஞையிட்டிருப்பினும் அதுவும் பொருத்தமுடையதே.

இவ்வாறு பலவாண்டுகள் சுற்றித் திரிந்தார். அவருடைய புனிதவடிகள் காவிரிக்கரையையே அதிகமாகப் புனிதமாக்கின. கரூர், திருஆநிலையூர், நெரூர் முதலிய

ஊர்ப்புறங்களிலும், அமராவதி காவேரியாற்றங்கரைச் சோலைகளிலும் அவர் காலங்கழித்து வந்தார். அவருக்கு நிலைப்பென்பது இல்லையாயினும், பூதவுடலை நீப்பதற்குக் காலத்தையும் இடத்தையும் குறித்துவிட்டார். காவேரி தக்ஷிணவாகினியாக ஓடும் நெரூர்க் காவிரிக்கரையே தம் பூதவுடலை நீப்பதற்குத் தக்க இடமெனக் குறித்து, முடிவுகாலத்தில் ஆற்றங்கரைச் சோலையிலேயே அதிகமாகத் தங்க ஆரம்பித்தார். அங்குள்ள இடைச் சிறுவர்களும், மற்றோரும் அவரைக் கண்டனர். பித்தரோ, பேயரோ, உன்மத்தரோவென அதிசயித்தவர் சிலர். புறக் கணித்தவர் சிலர். ஏதோ இயன்ற அளவு அவருக்குப் பணிவிடை செய்ய நின்றவர் சிலர். இன்றும் பண்டையிலும், மனிதன் நல்லதும் கெட்டதுமான போக்கையுடையவன். தன் வியவகாரங்களிலும் லாபத்திலும் கருத்துள்ளவனாக வாழ்ந்து, பிறரையும், கூடுமாயின் இறைவனையும், ஏமாற்றிப் புறவேஷங்களைக்கொண்டு தன்னையே ஏமாற்றிக்கொண்டு பெருந்துன்பமடைபவன். மற்ற விடங்களிலும் சிறந்தவர்களாக அப்போதைய நெரூர் வாசிகள் விளங்காவிட்டாலும், இடத்தின் அமைதியையும், அமைப்பையும் கண்டு சதாசிவர் தம் பூதவுடலை அங்கு நீப்பதென நிச்சயித்து அம்மண்ணையே பரிசுத்தமானதாகச் செய்துவிட்டார். தகுதியற்றவராயினும், அக்காலத்தவரையும், இன்றுள்ள அவர் சந்ததியாரையும், சிறப்புள்ள புண்ணிய பூமியில் பிறந்த பாக்கியசாலிகள் எனப் பிறர் கருதும்விதம் அவர்களுக்கு அருளும் செய்து விட்டார்.

பல நாட்கள் சமாதியில் உட்கார்ந்து, ஒரு நாள் கண் விழித்து, நெரூரில் சில பிராம்மணர்களைக் கூப்பிட்டு

ஜேஷ்ட சுத்த தசமியன்று, தம் பூதவுடலை நீக்க நாள் குறித்து விட்டதாக அறிவித்தார். அன்று காசியிலிருந்து ஒரு பிராமணர் ஒரு பாணலிங்கத்தைக் கொண்டுவருவா ரென்றும், அதைத் தம் சமாதிக்கருகில் பிரதிஷ்டை செய்ய வேண்டுமென்றும் தெரிவித்தார். பிராமணர்கள் அந்நாளன்று நிகழும் தெய்விக நிகழ்ச்சிகளுக்கு வேண் டிய ஏற்பாடுகளைச் செய்தார்கள்.


பெரியார் குறிப்பிட்ட நாள் நெருங்கவும், ஆற்றங் கரையருகே விசாலமான இடத்தைத் தேடிவைத்து, அதி லுள்ள புதர் பூண்டுகளைச் சுத்தம் செய்தார்கள். குறிப் பிட்ட இடத்தில் சாஸ்திர விதிப்படி வேண்டிய நீள ஆழ அகலங்களுடன் குழியையும் தயாரித்தார்கள். அத் திரு விழாவைக் கொண்டாட வேண்டிய எல்லாச் சாமக்கிரி களைச் சேர்த்துத் தயாராக வைத்துக் கொண்டார்கள்.

ஆன்மஞானி விதேக முக்தியடைவது ஓர் அதிசய சம்பவமே. அயலிலுள்ள கிராமத்தார்களும், அப்பெரி யார் பூதவுடலை நீத்துப் பிரமத்தில் இரண்டறக் கலப்ப தைக் காணப் பலர் குழுமிவிட்டார்கள். இச் சிறு கிராமத்தில் பெருந்திருவிழாவிற்குக் குவிவதைப்போல ஜனங்கள் திரண்டு விட்டார்கள். ஆன்மாவையும், ஜீவன் முக்தரையும் அறியாத பொது மக்களும் ஏதோ ஒரு பெரும் வேடிக்கை நிகழ்வதைக் காணலாமென்று குதூ கலித்தார்கள். வைதிக சிரேஷ்டர்களும் அரும் பெரும் தெய்விக நிகழ்ச்சியைத் தரிசிப்பதைப் பெரும் பாக்கியமாகக் கருதினார்கள். மற்றுமுள்ளோர் களும் அப்பெரியாரின் இறுதிக்காலத்தில் அவரது அநுக்கிரகம் பெற்றுத் தம் இஷ்டலாபங்களை அடையலா மெனவும் திரண்டார்கள். அவதூதராயும் அதிவர்ண

சிரமியாயும்இருந்ததனுல் அந்தணர்களும் அவரை முன்பே செவ்வனே அறிந்திருந்த ஏனையோரும் கூடியிருந்தார்கள்.

குறிப்பிட்ட நாளன்று, ஒரு புது உணர்ச்சியுடன் அந்த ஜனத்திரள் குறிப்பிட்ட காலத்தை எதிர்பார்த்துக்கொண்டு நின்றது. இம் மண் வாழ்க்கை யாதாயினும், இன்பமும் சுகமும் நிறைந்ததாயினும், துன்பமும் தொல்லையுமிருந்த தாயினும் மனிதனுக்கு வாழ்க்கையிலேயே பெரும்பற்று உண்டாகின்றது. ஏகசக்ராதிபத்தியம் செலுத்தும் சக்கரவர்த்தி தன் வாழ்க்கையை எவ்விதம் மதிக்கின்ருனே, அவ்விதமே அன்றைய உணவிற்கு அலையும் ஆண்டியும் மதிக்கின்ருன். அழுகிச் சொட்டும் முடவனும் உள்ள நிலையை நீடிக்கவாவது விரும்புகிருனே யன்றி வாழ்க்கையை முடித்துவிட விரும்புவதில்லை. உலகில் சகஜமாக, வாழ்க்கையில் வெறுப்பையும், உயிர் துறப்பதில் விருப்பையும் வார்த்தையில் வெளியிடுவது மாந்தர்களது இயல்பு; ஆயினும் அதற்கு எதிர்மாருன எண்ணமே மனத்தில் பதிந்திருக்கும். இந்தச் சகஜமான மனப்பான்மை கொண்டுள்ள பொதுமக்கள், ஒருவன் தன் காலத்தைக் கணக்கிட்டு தானுகவே அதை முடித்துக் கொள்ளத் துணிகின்ருனென்பதை நம்பவே முடியாது. அவ்விதமே துணிய மட்டுமின்றிச் செய்யவுமே ஒருவர் தலைப்படும் பொழுது, அதைக்காண ஆவலுடனிருப்பது இயற்கைதானே?

நேரம் நெருங்கியவுடன் சோலைகளில் தவத்திலும் தியானத்திலும் இருந்த பெரியவர், குறிப்பிட்ட இடத்தை நோக்கி ஜனத்திரளுக்கிடையே வந்தார். ஜனங்கள், வரு கின்ற பெரியவருக்கு வழிவிட்டு அவரையே உற்று நோக் கிய வண்ணமாக நின்றனர். பேராரவாரமும், அமைதி



ஸ்ரீ சதாசிவர் சமாதி

யும் கலந்து நின்று மாறுபட்டவையும் ஒன்று படுவதைக் குறிப்பதைப்போலத் தோன்றியது. வருகின்ற பெரியவரிடத்து விசேஷக்குறிப்பு எதுவும் தென்படவில்லை. என்றும் எங்கும் குறியற்று அலைந்து திரியும் நடையுடனேயும் கீழ்நோக்கிய பார்வையுடனேயும் வந்தார். தூக்கு மேடைக்கு இட்டுச் செல்லப்படுகின்ற கைதியினுடைய துயரமோ சலிப்போ, பெருமையை அடைய நிற்கும் ஒருவனுடைய மகிழ்ச்சியோ, போர்க்களத்து இறங்கி நிற்கும் வீரனின் ஆவேசமோ ஒன்றும் அவர் முகத்தில் காணப்படவில்லை. இன்று அல்லாத முன்பும் அவர் வாய் திறந்து பேசியதைக் கேட்டவர்களும் கண்டவர்களுமே இக்கூட்டத்தில் கிடையாது. முடிவாகப் பூதவுடலை மறைப்பதற்கு முன் சொல்லவேண்டிய சமாசாரம் ஒன்றும் உள்ளவராகவும் காணப்படவில்லை. ஒன்றும் சொல்லவுமில்லை. மௌன விரதத்திற்குப் பழுதில்லாதவிதம் எழுதிக்காட்டவும் செய்யவில்லை. அவர் பிறரிடம் கூற வேண்டுவதோ, விளக்க வேண்டுவதோ எஞ்சியுள்ளது எது?

குழியை நெருங்கினார். தலை நிமிர்ந்து, திரண்டிருந்த ஜனங்களைப் பார்த்தார். அப்பார்வையுடன் நிறைவையும், அமைதியையும் விளக்கும் புன்சிரிப்பும் லேசாகத் தோன்றியது. ஒரு கண நேரந்தான் இருக்கும்; குழிக்குள் இறங்கினார். குழிநடுவே சமாதி நிலையில் உட்கார்ந்து கொண்டு, மேற்கொண்டு செய்ய வேண்டுபவைகளைச் செய்யச் சமிக்ஞை செய்தார். இனிப் பூதவுடலுடன் தொடர்பை அறுத்து விட்டார். சாஸ்திரோக்தமாய் நடைபெற வேண்டிய யாவும் நடைபெறத் தொடங்கின.

அந் நிகழ்ச்சியைக் கண்டவர்களின் மன நிலையையும், மெய்ந்நிலையையும் விவரிப்பது சுலபமானதல்ல.

பலர் தலைக்குமேல் இருகரங்களையும் உயர்த்தித் தொழுத வண்ணமாய் நின்றனர். சிலர் கண்களில் நீர்வடியப் பிரமித்து, சதாசிவரின் மௌனத்தைத் தாமும் கொண்டவர் போன்று அசைவற்று நின்றனர். 'ஆ! ஆ!' எனப் பரிதாபப்படுகின்றவர் பலர். ஒன்றும் புரியாது ஒரு பெரியார் மறைவதை மட்டும் கண்டு சொல்ல முடியாத துயரத்தால் மார்பு வீங்கத் தேம்புவர் சிலர். வாய்விட்டு அலறியவரும் சிலர். "அந்த நல்ல தாத்தாவை என்ன செய்கின்றீர்கள்? விட்டு விடுங்கள்" என்று அழுகுரலுடன் ஓலமிடும் குழந்தைகள் பலர். சில அந்தணர்கள் பிழையற வேத மந்திரங்களைக் கோஷிக்கின்றார்கள். அப்பெரியாருக்குச் செய்ய வேண்டியவைகளை யெல்லாம் பிழையற அக்கறையாகச் செய்யவேண்டுமென்னும் ஒரே நோக்குடன் அங்குமிங்கும் அலைந்து நடப்பவைகளை மேற்பார்ப்பவர்கள் சிலர்.

கிரமமாகச் சடங்குகள் முடிந்ததும், ஜனத்திரள் கலைய ஆரம்பித்தது. தாம் கண்ட காட்சி கனவோ, நினைவோ என்ற ஐயமும் சிலருக்கு ஏற்பட்டது. பொழுதாகப் பொழுதாக அனைவரும் அகன்று விட்டனர். ஒரு பெரியாரின் பூவுலக வாழ்க்கை அற்புதத்திலும் அற்புதமாக முடிவடைந்து விட்டது. பரந்த பரம்பொருளுடன் அவர் ஒன்றினார். அவர் பூதவுடலுடனிருந்த பொழுது மாறுவதாகச் சிந்தித்தவரன்று. இப்பொழுதும் என்றும் போல் பரந்த வெளியிலும் கரந்த அணுவிலுமாக விரிந்து நிற்கலானார்.

இளமை தொட்டுக் கடுவிரதமும், தீவிர வைராக்கியமும் பூண்டு நின்று யோகாநுபூதிகளைப் பெற்ற பெரியார் இனிப் பூதவுடலாற் பயனில்லையென அதை நீத்தார். அவர் நுண்ணறிவையோ, அவர் வைராக்கியத்தையோ

மெச்சி வியக்காதவர் இல்லை. இல்வாழ்க்கையைத் துறப்பது மட்டும் துறவன்று; முற்றும் பற்றறுப்பதே துறவு. அத் துறவைப் பூண்டவர் இப் பெரியார். கல்விச் செருக்கும் நாவன்மையும் தம்மை மடக்கி வேறு வழிகளில் இழுத்துச் செல்லுமோவெனப் பயந்து மௌனம் பூண்டார். சந்நியாச ஆசிரம விதிகளும், முற்றும் துறப்பதற்குத் தடைகளை ஏற்படுத்துமோவென அதிவர்ணாசிரமம் மேற்கொண்டார். இன்பமும் துன்பமும், ஏற்றமும் தாழ்வும், பெருமையும் சிறுமையும், நட்பும் பகையும் இவ்வாறு மாறுபட்டவை பலவும் தம்முன் ஒத்திருப்பதை அறிந்து இரண்டையும் பொருட்படுத்தாது சென்ற மகான் அவர்.

அவர் சமாதிகால நிர்ணயத்தை நெரூர் வாசிகளின் மூலமாகத் தொண்டைமானரசர் கேள்விப்பட்டுத் தம் குருவிற்கு, அவர் வேண்டாமலும், தாம் செய்யவேண்டிய பணிவிடைகளைச் செய்யத் தயாராய் முன்வந்தார். அதற்கென வேண்டிய ஏற்பாடுகளையும் செய்தார். சதாசிவர் முன்பு சொல்லியபடியே அவர் சமாதியமைத்த பிறகு பாணலிங்கம் ஒன்றை எடுத்துக்கொண்டு ஓரந்தணர் காசியிலிருந்து வந்தார். அதை உரிய பொழுதில் சமாதிக்கருகே பிரதிஷ்டை செய்து சதாசிவரின் ஆணையை நிறைவேற்றினார்கள்.

சீடரான தொண்டைமானர்சர் இவ்வாறு பிரதிஷ்டை செய்த விக்கிரகத்திற்குக் கோவிலொன்றைக் கட்டுவித்தார். விதிப்படி அவ்விக்கிரக ஆராதனைக்கு வேண்டிய கட்டளைகளையும் திட்டம் செய்து சிப்பந்திகளையும் நியமித்தார். அன்று தொட்டு இன்றுவரை அக்கோவிலின் ஆகம பூஜைகளுக்கும், சமாதியின் வைதிக பூஜைக்கும் வேண்டிய செலவு புதுக்கோட்டை அரசாங்கத்தாராலேயே மேற்

கொள்ளப் படுகின்றது. நவராத்திரியில் விசேஷ பூஜைகளும், சமாராதனைகளும் நடைபெறுகின்றன. இத்தருமச் செலவுகளுக்கெனத் திருமயம் தாலூக்காவில் இரண்டு கிராமங்கள் மான்யமாக விடப்பட்டிருக்கின்றன. சிறிது காலத்திற்கு முன்பு வரையில் தொண்டைமானரசர்கள் பலரும் பக்தி சிரத்தையுடன் நெரூர் வந்து, சில நாட்கள் தங்கிச் சமாதியைத் தரிசனம் செய்து குருபரரின் அநுக்கிரகத்தைப் பெற்றுப் போயினர்.

புதுக்கோட்டையிலும் குருபரர் உபதேச மந்திரத்தையெழுதிய மணலை ஒரு பேழையில் வைத்து அதற்குச் சிறப்பு செய்து வருகிறார்கள். பிரகதாம்பாள் கோயிலிலே தக்ஷிணாமூர்த்தி கோயிலுக்கருகில் இப்பெரியாரின் சிலையொன்றும் கல்லில் செதுக்கி வைத்திருக்கின்றார்கள். அம்மன்னர்கள் பெருமையுடன் பிரகதாம்பா தாஸர்களென்று சொல்லிக் கொள்வதைப்போலச் சதாசிவரின் சீடர்களென்றும் சொல்லிக்கொள்ளுகின்றார்கள்.

அக்கோயிலிலும், சதாசிவர் சமாதியிலும் ஆகம வைதிக பூஜைகள் முறையாக நடைபெறினும் அவர் ஆராதனையைச் செய்யப் பலவாண்டுகளாக ஏற்பாடுகளில்லாமல் நின்றது. 1912-ஆம் வருஷம் ஒரு துறவி, லக்ஷார்ச்சனை ஸ்வாமிகள், சதாசிவரின் ஆராதனையைத் தொடங்கினர். அப்பெரியார் தொடங்கிய புனிதத்தொண்டு ஆண்டுதோறும் நடைபெற்று வருகின்றது. சமாதியில் லக்ஷார்ச்சனையும், சதாசிவர் ஆராதனையும், சங்கரர் ஆராதனையும், ஆயிரக்கணக்கானவர்களுக்கு அன்னதானமும் நடைபெற்றுவருகின்றன. இவ்வாராதனை உற்சவத்திற்குப்புதுக்கோட்டை அரசாங்கத்தார் செலவு செய்வதில்லை. நெரூர் வாசிகளும், அயலூர்ப் பக்தர்களுமாக ஒரு சபையை

ஏற்படுத்தி, பக்தர்கள் கொடுப்பதைக்கொண்டு ஆராதனை யைச் செய்து வருகின்றார்கள். இப்புனிதத் தொண்டை ஒருவர்பின் ஒருவராக விடாது செய்துகொண்டு வரு கிறார்கள்.

---

# அத்தியாயம் ஒன்பது

## முடிவுரை

பாம்பின்கால் பாம்பிற்குத் தெரியும் என்பதைப்போல, பெரியாரின் போக்கும் சிறப்பும் பெரியார்களுக்கே தெரியும். சிருங்கேரி பீடத்தை அலங்கரித்த ஜகத்குரு நரசிம்ம சுவாமிகள் தேசாடனம் செய்த பொழுது நெரூருக்கு விஜயம் செய்து, மூன்று நாட்கள் சதாசிவர் சமாதியிலேயே தியானத்தில் வீற்றிருந்தார். ஸ்ரீ நரசிம்ம ஸ்வாமிகளுக்குச் சதாசிவேந்திரரிடத்து மிக்க பக்தி இருந்தது. அவர் எப்பொழுதும், இப்புத்தகத்திலுள்ளதைப் போன்ற சதாசிவர் படமொன்றைத் தம் அருகே வைத்துக் கொண்டிருந்தார். சதாசிவர் அடைந்த பரிபக்குவத்தை அடைவதே தம்முடைய லக்ஷியமாகக் கொண்டிருந்தார். ஸ்ரீ நரஸிம்மஸ்வாமிகள் சமாதியில் நின்றுகொண்டு, மனமுருகி நாற்பத்தைந்து பாட்டுகள் பாடிச் சதாசிவரை வணங்கினார். அப்பாக்களில் இந்நூலில் கண்டுள்ள பல சம்பவங்களையும் குறிப்பிட்டுள்ளார். சதாசிவரின் வைராக்கியத்தையும், தவத்தையும் விரித்தும் விளக்கியும் வியந்தும் பாடியுள்ளார். ஸ்ரீ நரசிம்ம ஸ்வாமிகள் மட்டுமன்றி, காவேரிக்கரைகளில் சஞ்சரிக்கும் சந்நியாசிகள் அனைவரும் சதாசிவரின் ஸமாதியைத் தரிசித்து அவர் அருளைப்பெற முயன்று வந்திருக்கின்றார்கள். மண்ணாசை பொன்னாசை என்னும் அரை கல்லில் அரைக்கப்படுகின்றவர்கள் வாழ்க்கை வீண் பிடிசாம்பலாகவும், மனித வாழ்க்கையின் உயர்நிலையை நாடுபவர்கள் அனைவரும்

சதாசிவரைக் குருநாதராகக் கொண்டு பயன் பெற்று வருகின்றார்கள்.

கடுந்துறவு, நுண்ணறிவு, அருந்தவம் இவைகளை மேற்கொண்டு ஜீவன்முக்தராக விளங்கிய இப்பெரியாரின் பெருமையை நம்போன்றோர் அளவிட்டறிதல் கூடுவதல்ல. எதனினும் பெரியவர், எவரினும் பெரியவர் என்று சொல்வதுடன் நிறுத்துவதே சிறந்தது. சாஸ்திர ஆராய்ச்சியென்னும் குறுவழியில் இடர்ப்படாது குன்றின்மிசை விளக்கென ஒளிவீசும் பெரியவரை, வைராக்கியமென்னும் கடுவழி யேறி, தத்துவமென்னும் மேடையில் முக்தியின்பத்தில் திளைக்கின்ற பெரியவரை, பரந்த உலகில் நிலையான இடமின்றிக் கைப்பிச்சையேற்று, அவா இன்மையே அணியாக நின்ற பெரியவரைக் கொண்டாடுவதல்லது பரிசீலனை செய்ய நம் போன்றோருக்கு அருகதையில்லை. அப் பெரியார் நம் வழிபாட்டையும் பக்தியையும் எதிர்பார்க்கவுமில்லை. ஆயினும் நாம் கை விளக்கைப்போன்றுதவும் அவர் நூல்களையும், ஊன்றுகோல்போன்றுதவும் அவர் வாழ்க்கையையும் நன்கறிந்து, அவர் கொண்டு அடைந்த லக்ஷ்யத்தை நாமும் அடைய முயன்று, அவருடைய அருளைப் பெறவேண்டுமென்று நாடுவதே நாம் செய்ய வேண்டுவதாகும்.

---

# அத்தியாயம் பத்து

## அத்வைதமும் பிரம்மேந்திரரும்

**நா**ம் வசிக்கும் இந்தப் பாரத மண்டலத்தில் ஆஸ்திக மதங்கள் அனேகம் இருப்பினும் அவைகளில் அத்வைத மதமே முதன்மையானது. முன்காலத்தில் ஸ்ரீ சங்கர பகவத் பாதாசார்யர் 72 துர்மதங்களை அழித்து ஆறு ஆஸ்திக மதங்களை ஸ்தாபித்தார். அவற்றிலும் சுத்தாத்வைத மதத்தையே முக்கியமாக ஸ்தாபித்தார்.

ஆதி சங்கரர் அத்வைதத்தை ஸ்தாபனம் செய்த விஷயத்தில் ஈசுவரனும் அதை அங்கீகாரம் செய்தால்தான் அத்வைதம் வேரூன்றித் தழைத்தோங்கி வளருமென்று எண்ணித் தாம் திக்விஜயம் செய்யுங்காலத்தில் மத்தியார்ஜுன க்ஷேத்திரஞ் சென்று அங்கு மகாலிங்கத்தின் ஸந்நிதானத்தில் அஞ்சலிபந்தம் செய்துகொண்டு, "ஹே ஸ்வாமின், உபநிஷத்துக்கள் ப்ரம்ம ஸூத்திரங்கள் மற்றுமுள்ள வேதாந்த நூல்கள் அத்வைதத்திலேயே முக்கிய தாத்பரியத்தையடைவது வாஸ்தவமா இல்லையா" என்று பக்தியுடன் பிரார்த்திக்க, அச்சமயம் பரமேசுவரன் மகாலிங்கத்தினின்றும் திவ்ய ரூபமாய் ஆவிர்ப்பாவத்தை அடைந்து வலது கையை உயரத்தூக்கிக்கொண்டு மேகம் கர்ஜிப்பது போல் கம்பீரமான த்வனியில், 'அத்வைதமே ஸத்தியம்' என்று மூன்று தடவை சொல்லிவிட்டு உடனே மகாலிங்கத்தில் மறைந்தான்.

ஆனால் ஜீவனென்றும் ஈசுவரனென்றும் இரண்டு தத்துவங்கள் உபநிஷத்தில் சொல்லுகிறபடியால் ஜீவப் பிரம்மைக்கியத்தை நிர்ணயிக்கிற அத்வைதந்தான் உப

நிஷத்தின் முக்கிய தாத்பரியமென்று சொல்லுவது சரியல்ல வென்று சிலர் எதிர்க்கக்கூடும். ஆனாலும் உலகத்தில் பாமர ஜனங்களுக்குத் தான் என்றும் ஈசனென்றும் ஏற்பட்ட பேதத்தை யனுசரித்து முதலில் வேதம் இரண்டு தத்வமாக ஆரம்பித்து, எவ்விதம் சுத்தமான பாலையும் நீர் கலந்த பாலையும் ஒரே இடத்தில் வைத்து நீர் கலந்த பாலிலுள்ள நீரைப் பிரித்த பிறகு அது சுத்தமான பாலுடன் ஒன்றுபட்டதாக இருக்குமோ, அவ்விதமே உபாதியால் ஏற்பட்ட கிஞ்சிஞ்ஞஸ்வபாவமுடைய ஜீவனுக்கு உபாதி நாசத்தால் ஜீவபாவம் விலக, ஸர்வஞ்ஞனான ஈசுவரனாகவே ஆகவேண்டுமென்று வேதம் போதிக்க வந்தது என்ற அபிப்பிராயந்தான் பொருத்தமாகும்.

பின்னும் வேதமானது, கர்மபலத்திற்கு நித்தியத்தைப் போதித்து, கர்மானுஷ்டானம் பண்ணும்படி மனுஷ்யனை உற்சாகப்படுத்துகிறது. அதே வேதமானது கர்மானுஷ்டானத்தால் சித்தசுத்தியைஅடைந்து கர்மாவை ஈசுவரார்ப்பணம் செய்து, கர்மபலம் அநித்யமென்றும் அதை அபேக்ஷிக்காமல் ஸர்வ கர்ம ஸன்யாஸ பூர்வகமாய் அடையும் சாசுவதமான மோக்ஷமே நித்தியமென்றும் அதிலேயே மனுஷ்யன் பிரவர்த்திக்கவேண்டுமென்றும் சொல்லுகிறது. இவ்வாக்கியங்களில் சாமான்ய நியாயத்தால் கர்மபலம் நித்தியமென்றும் விசேஷ நியாயத்தால் அதையே அநித்திய மென்றும் நிரூபித்து மோக்ஷத்தையே நித்யமென்றும் ஸ்தாபிப்பதுபோல் ஸாமான்யமாய் ஜீவனையும் ஈசுவரனையும் வேறுவேறாகப் பிரஸ்தாபித்து விசேஷ வாக்கியங்களால் ஜீவேசுவர ஐக்கியத்தையே ஸித்தாந்தமாகக் கொண்ட அத்வைதத்தையே ஸ்தாபிக்கின்றது. இந்த அத்வைத தாத்பரியத்திலேயே உபநிஷத்துக்கள் முடிவாகின்றனவென்

பது வேதாந்த சாஸ்திரவிசாரம் செய்த பண்டிதர்களுக்கு உள்ளங்கை நெல்லிக்கனிபோலாகும்.

எவ்வாறு வெவ்வேறு நாமத்தையும் ரூபத்தையும் அடைந்த பல நதிகள் பெருகிக் கடைசியில் சமுத்திரத்தில் சேர்ந்தவுடன் தம் நாமரூபத்தை விட்டுச் சமுத்திரத்துடன் ஒன்றாகச் சேர்ந்துவிடுகின்றனவோ, அவ்வாறு ஆத்ம ஞானி ஸ்வரூபானுஸந்தானத்தால் விதேக கைவல்யத்தை யடைந்து நாமரூபங்களினின்றும் விடுபட்டுப் பூர்ணமாயும் நித்தியமாயுமுள்ள ஆத்ம ஸ்வரூபத்துடன் ஒன்றாகக் கலக்கிறானென்று முண்டகோபநிஷத்து நிர்ணயம் செய்கிறது. பிரம்மத்தை அறிந்தவன் பிரம்மமாகவே ஆகிறான் என்பது உபநிஷத்வாக்யம். பிரம்மமாகவே என்று வற்புறுத்திக் கூறுவதால் நிர்க்குணமான பிரம்மத்தையே குறிப்பிடுகிறபடியாலும் பிரபஞ்ச சம்பந்தமும் குணசம்பந்தமுமற்ற ஆத்ம தத்வம் ஒன்றேதான் நிச்சயம் செய்கிறபடியால் அந்த வாக்கியம் அத்வைதப் பொருளை விளக்குவதைப் போல் மற்ற எவ்விதமான கொள்கைக்கும் அது பொருத்தமாகாது.

KOVILOOR MADALAYAM
KOVILOOR - 630 307

சாந்தோக்கிய உபநிஷத்து 6-வது அத்தியாயத்தில் உத்தாலக சுவேதகேது ஸம்வாதத்தில் உத்தாலகர் தம் புத்திரன் சுவேதகேது எவ்வளவு வித்தையைக் கற்றாலும் ஆத்ம வித்தையை யறியாததால் அவன் கற்காதவனென்றெண்ணி அவனுக்கு ஸத்வித்யையை உபதேசம் செய்கிறார். ஸத் என்ற பதமானது நிர்க்குண பிரம்மத்தையே உத்தேசிப்பதாலும், பகவத் கீதையிலும் ஓம், தத், ஸத், என்ற மூன்று பதங்களால் பிரம்மத்தைச் சொல்லுவதாலும் ஸத் வித்தையென்பது நிர்க்குணப் பிரம்ம ஸ்வரூபத்தையே சொல்லுகிற வித்தையென்று அர்த்தம்.

எதை அறிந்தால் உலகத்தில் அறியப்பட்டதாகுமோ அதுதான் ஆத்மா. எப்படி மண்ணின் விகாரமானது கடம் என்ற நாமதேயத்துடன் வியவஹாரத்திலேற்பட்டு, பிறகு விகாரங்கள் யாவும் நாசமடைந்த காலத்தில் ஸத்யமான மண் ஒன்றுதான் பிரபஞ்சத்தில் அழிவற்றதோ, அவ்வாறு பாஞ்ச பௌதிகமான பிரபஞ்சங்கள் எல்லாம் விகாரமானதால் இவை நாசமடைந்தாலும் இதற்கு நிமித்த உபாதான காரணமான பிரபஞ்சத்தைக் காட்டிலும் வேறான ஸத்ரூபமான ஆத்மவஸ்து ஒன்றுதான் ஸத்தியம். தன்னைக் காட்டிலும் வேறில்லாததான இந்த ஜீவ ஸ்வரூபத்தில் பிரவேசித்து ராமகிருஷ்ணாதி நாமங்களையும் கறுப்பு வெளுப்பு முதலிய ரூபங்களையும் ஜீவகோடிகளுக்குச் செய்கிறேனென்ற அர்த்தமுள்ள உபநிஷத் வாக்கியத்தின் பிரமாணத்தாலும் ஜீவனுக்கும் பிரம்மத்திற்கும் உபாதிநாசத்தினால் அபேதமே நிரூபிக்கப்படுகின்றது.

ஸ்ரீ சங்கர குருவுக்கும் மண்டனமிச்ரருக்கும் வாதமேற்பட்ட சமயத்தில் ஜீவப்பிரம்மைக்கியத்தை அங்கீகரிக்காத மண்டனமிச்ரருக்கு, சாந்தோக்கிய உபநிஷத் 6வது அத்தியாயத்தில் உத்தாலகர் சவேதகேதுவுக்கு அனேக திருஷ்டாந்த பூர்வகமாய் மகா வாக்கியங்களுக்கு ஜீவப்பிரம்மைக்கியமேதான் பரம தாத்பரியமென்று நிர்ணயம் செய்ததுபோல் ஸ்ரீ சங்கரர் சுருதி, யுக்தி, அனுபவம் என்ற மூன்று விதத்தாலும் அவருக்கு ஏற்பட்ட ஸந்தேகங்களை நிவர்த்தி செய்து, உபநிஷத் மகாவாக்கியங்களுக்கு ஜீவப்பிரம்மைக்கியத்தையே பரமதாத்பரியமாய் நிர்ணயம் செய்து, அத்வைத ஸித்தாந்தத்தை ஸ்தாபனம் செய்தார்.

இரண்டாவது பதார்த்தம் விகாரமானதாலும் விகாரத்திற்கு அழிவேற்படுவதாலும் அழிவுள்ளது அநித்ய

மானதாலும் அநித்யமான வஸ்துவின் விசாரத்தால் நித்ய மான மோக்ஷப் பிராப்தியென்பது நியாயத்திற்கும் சாஸ் திரத்திற்கும் விரோதமாயிருப்பதாலும் நிர்க்குணமாயும் ஸத்ரூபமாயுமுள்ள பிரம்ம விசாரத்தினால்தான் சாசுவத மான மோக்ஷப்பிராப்தி யேற்படுவதாலும் அத்வைத ஸித் தாந்தமே சுருதி ஸ்மிருதி புராணங்களுக்கு ஸம்மதமென் பதில் ஸம்சய லேசமுமில்லை.

பின்னும் அத்வைத ஸித்தாந்தத்திற்கு மாறாக இருக்கும் பேதஞானம் நிந்திக்கப்படுகிறது. ஒன்றான ஆத்மஞானம் எதுவோ அதற்கு ஸமானமான வேறு பொருள் பிராம் மணனுக்குக் கிடையாதென்று மோக்ஷதர்மத்தில் சொல் லப்பட்டிருக்கிறது. இவ்விதமான அத்வைத மதமானது ஈசுவரனின் சுவாஸத்தினின்றும் ஏற்பட்ட அநாதியான வேதங்களினின்றும் பிரவர்த்தித்து மத்தியகாலத்தில் வேத விரோதிகளால் சீர்கேடடைந்து பிறகு ஸ்ரீ சங்கரபகவத் பாதரால் பிரம்மசூத்திர பாஷ்யம் உபநிஷத் பாஷ்யம் முதலிய கிரந்தங்களால் ஸ்தாபனம் பண்ணப்பட்ட பிர காரம் ஸ்ரீ சதாசிவப் பிரம்மேந்திரர் ஸ்ரீ பரமசிவேந்திரா சார்யரிடம் உத்தமமான ஞானோபதேசம் பெற்று, பிரம்ம ஸூத்திரத்திற்கு, "பிரம்ம தத்வப் பிரகாசிகை" யென்று ஒரு விருத்தி செய்திருக்கிறார்.

மேற்படி விருத்தியானது பிரம்ம தத்துவத்தை எளி தில் பிரகாசப் படுத்துவதால் அதற்குத் தகுதியான பெய ரென்றே சொல்லலாம். இந்த விருத்தியில் பூர்வாசாரியர் களால் விஸ்தாரமாக நிரூபணம் செய்த விஷயங்களைச் சுருக்கமாகவும் அழகிய நடையுடனும் சாஸ்திர ஸித்தாந் தத்திற்குக் கொஞ்சங்கூடக் குறைவேற்படாமலும் ஒவ் வோர் அத்தியாயத்திலும், ஒவ்வொரு பாதத்திலும், ஒவ்

வோர் அதிகரணத்திலும், சூத்திரார்த்தங்களையும் உபநிஷத் வாக்கியார்த்தங்களையும், வேதாந்த சாஸ்திர ஸித்தாந்தங்களையும் அதிகரண லக்ஷணமூலமாய் வெளிப்படுத்தியிருப்பதைக் கவனிக்குங்கால் ஸ்ரீ பிரம்மேந்திரரின் ஆத்மானுபவ ஞானம் ஒப்புயர்வற்றதென்று நிச்சயமாகச் சொல்லலாம்.

பின்னும் ஸ்ரீ சதாசிவப் பிரம்மேந்திரரின் ஸமாதி நிலையானது ஸ்ரீ ஸதாசிவரால் செய்யப்பட்ட ஆத்மவித்யா விலாஸமென்ற கிரந்தத்தினின்றே பிரஸித்தமாகிறது.

பின்னும் பிரம்மேந்திரர் ஆத்மா ராமனாயும் ஆத்ம நிஷ்டராயும் தேகாபிமானத்தை விட்டுப் பேத ஞானத்தையொழித்து ஆத்மதத்வத்தில் லயத்தை அடைந்து நம் தக்ஷிணதேசத்திலும் அதிலும் முக்கியமாய் அகண்ட காவேரி தீரங்களிலும் ஸஞ்சரித்த விஷயம் மிகவும் பிரஸித்தமானது.

க்ஷேமத்தில் விருப்பமுள்ளவன் ஆத்ம ஞானியைப் பூஜிக்க வேண்டுமென்ற வாக்கியப் பிரகாரம் ஸ்ரீ பிரம்மேந்திரர் ஸ்மரணம் கீர்த்தனம் கைங்கரியம் முதலியவைகள் மனுஷ்யனுக்கு ஐஹிகமாயும் ஆமுஷ்மிகமாயும் இருக்கும் பலன்களைக் கொடுப்பதென்பதில், சந்தேகமில்லையென்று பெரியோர்கள் கூறுகிறார்கள்.

ஓம் தத்ஸத்

முற்றிற்று.